Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, OCTOBER 17, 2022

திங்கட்கிழமை, 17 ஒக்டோபர் 2022 | ஒளி: 08 கதிர் 122 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE



## புதிய கணக்கை திறக்க முடியாது

சிரேஷ்ட பிரஜைகளின் புதிய நிலையான வைப்புக்களை திறப்பதை நிறுத்தும் சுற்றறிக்கையை இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ளது.

தொடர்ச்சி P2



### நாவலப்பிட்டியில் பெரும் பதற்றம்

# மஹிந்தவை எதிர்த்த சஜித் அணியினர் கைது





நாவலப்பிட்டியவில், ஏட்டிக்குப் போட்டியா ஆளும், எதிர்கட்சியினர் இரண்டு கூட்டங்களை நடத்தியமையால் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டிருந்தது. வீதிக்கு குறுக்காக, பெருந்திரளான பொலிஸார் வரிசையாக நிறுத்திவைக்கப்பட்டிருந்தனர்.

தொடர்ச்சி P2

## வாங்கிய கடனை இலங்கை திருப்பிச் செலுத்தும்



### பங்களாதேஷ் மத்திய வங்கியின் ஆளுநர் நம்பிக்கை

2023ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்குள் தமக்கு செலுத்த வேண்டிய 200 மில்லியன் டொலர் கடனை இலங்கை திருப்பிச் செலுத்தும் என பங்களாதேஷ் நம்பிக்கையுடன் உள்ளது என்று அந்நாட்டின் மத்திய வங்கியின் ஆளுநர் அப்துர் ரூஃப் தாலுக்டர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

### எல்லை தாண்டி மீன்பிடித்த

## இலங்கை மீனவர்கள் ஐவர் கைது

■ எஸ். லம்பேட்

எல்லை தாண்டி மீன்பிடித்து கொண்டிருந்த இலங்கை மீனவர்கள் 5 பேரை இந்திய கடற்படையினர் நேற்று (16) காலை கைது செய்ததோடு, அவர்கள் மீன் பிடி படகையும் பறிமுதல் செய்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## ஐ.எம்.எப் பிரதி முகாமைத்துவ பணிப்பாளருடன் சந்திப்பு

நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க உள்ளிட்ட இலங்கையின் பிரதிநிதிகள் குழு, சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ.எம்.எப்) பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் கெஞ்சி ஒகாமுராவை வொஷிங்டனில் சந்தித்துள்ளது.

தொடர்ச்சி P2

## எரிபொருள் முறைகேடுகள் குறித்து விசாரணை

### மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்மானம்

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் அண்மையில் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய, எரிபொருள் விநியோகத்தில் இடம்பெறும் முறைகேடுகள் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பிக்க தீர்மானித்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## கொத்து குறைந்தது: பாண் குறையாது



இறக்குமதி செய்யப்படும் கோதுமை மாவின் விலை குறைவடைந்ததையத்து, நேற்று (16) முதல் அமுலுக்கு வரும் வகையில் கொத்து ஒன்றின் விலை 50 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்தது.

தொடர்ச்சி P2

### நாடு சந்திக்கும் அனர்த்தத்தின்

## அமைச்சரவையே முதல் குற்றவாளி



### அமைச்சர் சப்ரியின் கருத்துக்கு சரித்த எம்.பி பதிலடி

நாடு சந்திக்கும் அனர்த்தத்தின் முதல் குற்றவாளியான அமைச்சரவையில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியும் அங்கம் வகித்ததாக பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித்த ஹேரத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### சீரற்ற வானிலை

## 3 பேர் பலி: 61,467 பேர் பாதிப்பு

### கடும் மழையுடன் கூடிய வானிலை நீடிக்கும்



நாட்டில் நிலவும் கடும் மழையுடன் கூடிய சீரற்ற வானிலையால் 11 மாவட்டங்களில் உள்ள 15,404 குடும்பங்களைச் சேர்ந்த 61,467 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், மூவர் உயிரிழந்துள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது.

தொடர்ச்சி P2



## மீண்டும் கிளர்ச்சி வெடிக்கும்

### விமல் எம்.பி ஆரூடம்

இலங்கையில் அமுல்படுத்தப்பட்டுள்ள வரி அதிகரிப்பினால் சமூக அமைதியின்மை பல மடங்கு அதிகரிக்கும் என்று தெரிவித்த தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச, சமூக அமைதியின்மை மூலம் மீண்டும் ஒரு கிளர்ச்சியான சமூகப் போக்கு உருவாகலாம் என்றும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## தண்ணீர் விலையைவிட பால் விலை குறைவு

■ வ.சக்தி



ஒரு லீற்றர் தண்ணீர் போத்தலின் விலை 160 ரூபாய் என்றும் ஆனால் ஒரு லீற்றர் பாலின்விலை 110 ரூபாய் என்றும் தெரிவித்த மட்டக்களப்பு மாவட்டம் மண்டூர் கணேசபுரத்தில் இயங்குகின்ற பிள்ளையார் பாற் பண்ணையாளர்கள், இச்சூழலில் தம்மால் பாலுற்பத்தியை அதிகரிக்க முடியாமலுள்ளது என்றும் கவலை தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

## தான் கொண்டு வந்ததால் தாக்கப்படுகிறார் மஹிந்த



'பொடி மைனா' என்று தன்னை அழைப்பதற்கு மகிழ்ச்சியடைவதாக தெரிவித்த ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கொண்டு வந்த இணையத்தைப் பயன்படுத்தி அவரே தாக்கப்படுகிறார் என்று தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## அரசியலில் இருந்து நான் விலகுவேன்



எந்தவொரு தேர்தலுக்கும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன முகங்கொடுக்க தயார் என அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

நாவலப்பிட்டி தேர்தல் தொகுதியில் முடிந்தால் ஒரு தொகுதியைக் கைப்பற்றிக்காட்டுங்கள் என ஜே.வி.பிக்கு சவால் விடுத்துள்ள அவர், ஒரு தொகுதியை ஜே.வி.பி கைப்பற்றினாலும் அரசியலில் இருந்து தான் விலகுவதாகவும் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் "ஒன்றாக எழுவோம்" மாநாடு முதலில் களுத்துறையிலேயே நடைபெற்றது. எனினும் இதனை முதலாவதாக நாவலப்பிட்டியில் நடத்த வேண்டுமென நான் கேட்டிருந்தேன் என்றார்.

எவ்வாறாயினும் நாவலப்பிட்டியின் இன்றைய கூட்டத்தில் 2 ஆயிரம் கதிரைகள் போடப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# மஹிந்தவை எதிர்த்த...

குண்டாந்தடிகள் ஏந்தியவாறு, கலகமடங்கும் பொலிஸாரும் உஷார் நிலையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தனர். இதனால், நாவலப்பிட்டிய நகரின் ஊடான பொதுப் போக்குவரத்து பலமணி நேரங்களுக்கு துண்டிக்கப்பட்டது.

“ஒன்றாக எழுவோம்” எனும் தொனிப்பொருளில், முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்தகமே ஏற்பாடு செய்திருந்த ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் நாவலப்பிட்டி மாநாட்டில் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் கலந்துகொண்டார்.

இந்நிலையில், அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் வரி திருத்தங்கள், விலைவாசி அதிகரிப்பு, மக்கள் மீதான சுமை ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியினர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

ஐக்கிய மக்கள் சக்தியினர் கடும் எதிர்ப்பை தெரிவித்து, நாவலப்பிட்டி நகரத்தில் பேரணி நடத்தியமையால் அங்குப் பதற்றமான நிலைமை ஏற்பட்டது. இந்தப் பேரணிக்கு முன்கூட்டியே அனுமதி பெறவில்லை என்றக் குற்றச்சாட்டின் கீழ், ஐக்கிய மக்கள் சக்தியின் நாவலப்பிட்டி தொகுதி அமைப்பாளர் உள்ளிட்ட 16 பேரைப் பொலிஸார் நேற்று (16) கைது செய்திருந்தனர்.

முன்கூட்டியே அனுமதி பெறவில்லை என்பது தொடர்பிலான அறிவுறுத்தலை ஒலிபெருக்கி ஊடாகப் போராட்டக்காரர்களுக்கு அறிவித்தனர்.

பொலிஸாரின் அறிவுறுத்தலை மீறி, போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அதனை தொடர்ந்து பொலிஸார் அங்கிருந்த 16 பேரைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## வாங்கிய கடனை...

அமெரிக்காவின் வொஷிங்டன் நகரில் நடைபெறும் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் வருடாந்த உச்சி மாநாட்டில், இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவைச் சந்தித்த பின்னரே இந்த விடயத்தை அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு நாணய பரிமாற்ற ஒப்பந்தத்தின் கீழ் வங்காளதேசம் 200 மில்லியன் அமெரிக்க டாலர் கடனை வழங்கியதாக குறிப்பிட்ட அவர், அதை 2023ஆம் ஆண்டு பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் மூன்று தவணைகளில் மீளச் செலுத்த வேண்டும் குறிப்பிட்டார்.

இலங்கை முன்கூட்டியே மீளச் செலுத்த வேண்டியிருந்த போதிலும், பங்களாதேஷ் இலங்கையைப் பாதித்த பொருளாதார நெருக்கடி காரணமாக செலுத்துவதற்கான காலக்கெடு நீடிக்கப்பட்டதாக குறிப்பிட்டார். தாங்கள் ஒரு நல்ல சந்திப்பை நடத்தியதாகவும் திருப்பிச் செலுத்துவதற்கான காலக்கெடுவை அவர்கள் சந்திப்பார்கள் என்று இலங்கை மத்திய வங்கி ஆளுநர் தன்னிடம் உறுதியளித்தாக தாலுக்டர் தெரிவித்தார்.

இலங்கை இப்போது தங்களது கடன்களை மறுசீரமைத்து வருவதாகவும் அது தொடர்பில் இந்தியா, ஜப்பான் மற்றும் சீனாவுடன் பேச்சுக்களில் ஈடுபட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டினார்.

2022ஆம் ஆண்டு, நாணய மாற்று ஒப்பந்தத்தின் கீழ் இலங்கைக்கு தனது அந்நிய செலாவணி கையிருப்பில் இருந்து குறைந்தபட்சம் 200 மில்லியன் டொலர் கடனை வழங்க பங்களாதேஷ் ஒப்புக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கை மீனவர்கள் ஐவர் கைது

இலங்கை கடற்படையினரின் எல்லை மீறிய செயலால் தமிழக மீனவர்கள் பல லட்சம் மதிப்பிலான வலைகள், மீன்களை இழந்து வருகின்றனர்.

இதற்கிடைடையே அவ்வப்போது இலங்கை கடற்படையினர் அத்துமீறி தமிழக மீனவர்களை தாக்குவது, துப்பாக்கிச்சூடு நடத்துவது போன்ற சம்பவங்கள் நடக்கின்றன. இதனால் ராமநாதபுரம், புதுக்கோட்டை, காரைக்காலை சேர்ந்த மீனவர்கள் அதிகமாக பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்த மார்க்ஸ் ஜூட் மாஸ்டர், அண்டனி ஹேமா நிஷாந்தன் , இமானுவேல் நிக்சன், துருவந்தா ஸ்ரீலால், சுதீஷ் சியான் உள்ளிட்ட இலங்கை மீனவர்கள் 5 இலங்கை மீனவர்களை இந்திய கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இவர்கள் நடுக்கடலில் இலங்கை கடல் எல்லையை தாண்டி இந்திய எல்லைக்குள் நுழைந்து மீன் பிடித்த நிலையில் கடற்படையினரிடம் சிக்கினர். இவர்களிடம் இருந்து ஒரு படகு பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

தொடர்ந்து விசாரணைக்காக தூத்துக்குடி தருவைகுளம் கடற்கரைக்கு அழைத்துவரப்பட்டு அவர்களிடம் கடலோர காவல் படையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## புதிய கணக்கை திறக்க முடியாது

அதற்கமைய, எதிர்காலத்தில் சிரேஸ்ட பிரஜைகள் புதிதாக நிலையான வைப்பு கணக்குகளை திறக்க வேண்டாம் என்றும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையான வைப்பு கணக்குகல் காலாவதி ஆனதும் புதுப்பிக்கப்படாது என்றும் மத்திய வங்கியின் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிரேஸ்ட பிரஜைகளுக்கு அதிகபட்சமாக 15 இலட்சம் வைப்பிலிடும் நிரந்த வைப்புக்காக 15 சதவீதத்துக்கு அதிகமான வட்டி வீதத்தை தை வணிக வங்கிகள் பல ஆண்டுகளாக வழங்கி வருகின்றன.

இது தொடர்பில் கொமர்ஷல் வங்கியின் சிரேஷ்ட அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது, சாதாரண நிலையான வைப்புத் தொகையில் 15 இலட்சம் ரூபாவை வைப்பிலிடுபவர்கள் தற்போது 23 சதவீத வட்டி வீதத்தைப் பெற முடியும் எனத் தெரிவித்தார்.

எனவே, சிரேஸ்ட பிரஜைகள் நிரந்தர வைப்புத்தொகையை இழப்பதால் வைப்பாளர்களுக்கு நஷ்டம் ஏற்படாது என்றார்.

## ஐ.எம்.எப் பிரதி முகாமைத்துவ பணிப்பாளருடன் சந்திப்பு

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் வருடாந்த உச்சி மாநாடு அமெரிக்காவின் வொஷிங்டன் நகரில் நடைபெற்று வருகிறது.

உத்தேச விரிவாக்கப்பட்ட நிதி வசதிக்கான சர்வதேச நாணய நிதிய நிறைவேற்றுக் குழுவின் அனுமதியை பெறுவதற்குத் தேவையான அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து அங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது.

இலங்கையின் அண்மைக்கால பொருளாதார நிலைமைகளும் குறித்த சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் மாற்று நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி சந்திரநாத் அமரசேகர, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, திறைசேரி செயலாளர் மஹிந்த சிறிவர்தன ஆகியோர் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## அமைச்சரவையே முதல் குற்றவாளி

பொருளாதாரத்தின் யதார்த்தம் தொடர்பிலான புரிதல் இன்றி அமைச்சரவை இருந்ததாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி வெள்ளிக்கிழமை (14) இடம்பெற்ற நிகழ்வொன்றில் தெரிவித்த கருத்துக்கே சரித்த எம்.பி பதிலளித்திருந்தார்.

இந்த நாட்டின் பொருளாதார கல்வியறிவு மிகவும் குறைவாக உள்ளதாக தெரிவித்த அமைச்சர் அலி சப்ரி, அமைச்சரவையின் நிலை அப்படி என்றால், சாதாரண மக்களின் நிலை என்ன? என்றும் அந்த நிகழ்வில் கேள்வியெழுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் அந்நியச் செலாவணி நெருக்கடி தொடர்பில் தாம் இரண்டு தடவைகள் அமைச்சரவையில் அறிவித்திருந்ததாக சரித்த எம்.பி தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

இது தொடர்பில் அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்ட போதிலும் தீர்வினைப் பெற்றுக்கொடுக்க தவறியுள்ளதாக குறிப்பிட்ட சரித்த எம்.பி, சில ஆவணங்களையும் தனது டுவிட்டர் பதிவில் சுட்டிக்காட்டியிருந்தார். 2019 ஆம் ஆண்டு முதல் அமைச்சர் அலி சப்ரி அமைச்சரவையை பிரதிநிதித்துவப்படுத்தி வருவதையும் சுட்டிக்காட்டிய அவர், 2019 ஆம் ஆண்டு முதல் நீதி, நிதி மற்றும் இப்போது வெளிநாட்டு அமைச்சராக அமைச்சரவையை அலி சப்ரி பிரதிநிதித்துவப்படுத்துகிறார் என்று குறிப்பிட்டார்.

## எரிபொருள் முறைகேடுகள்...

குறித்த முறைப்பாடு தொடர்பில் ஆரம்பக்கட்ட உண்மைகளை சேகரிக்கத் தொடங்கியுள்ளதாக தெரிவித்துள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொள்ளவும் தீர்மானித்துள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இடம்பெறுவதாகக் கூறப்படும் முறைகேடுகள் தொடர்பில் 200க்கும் அதிகமான நுகர்வோர் முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. எரிபொருள் நிரப்பு நிலைய முறைகேடுகள் குறித்து நுகர்வோரால் அதிக எண்ணிக்கையான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டு வருவதாகவும் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. மேலும், அனைத்து மாவட்டங்களிலும் காணப்படும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் மாதிரிகளை பரிசோதிக்கும் வேலைத்திட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## கொத்து குறைந்தது பாண் குறையாது

சந்தையில், இறக்குமதி செய்யப்படும் கோதுமை மாவின் விலை குறைந்துள்ளதை அடுத்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.

இதேவேளை, இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ கிராம் கோதுமை மாவின் மொத்த விற்பனை விலை 290 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ள போதும் பாண் உள்ளிட்ட பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலைகளை குறைக்க முடியாது என்று அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் குறிப்பிட்டது.

நாட்டிலுள்ள பேக்கரிகளுக்கான 50 சதவீத கோதுமை மா தேவையை நாட்டின் பிரதான கோதுமை மா நிறுவனங்களான செரண்டிப் மற்றும் பிரீமா ஆகியவை பூர்த்தி செய்வதாக சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்த்தன சுட்டிக்காட்டினார்.

அந்த இரண்டு நிறுவனங்களும் விலைகளை இதுவரை குறைக்காத காரணத்தினால் பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலைகளை குறைக்க முடியாது என்று அவர் குறிப்பிட்டார்.

## 3 பேர் பலி: 61,467 பேர் பாதிப்பு

ஹம்பாந்தோட்டை, காலி, திருகோணமலை, கிளிநொச்சி, களுத்துறை, கொழும்பு, கம்பஹா, புத்தளம், கேகாலை, இரத்தினபுரி மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களே பாதிக்கப்பட்டுள்ளதாக நிலையம் அறிவித்துள்ளது.

சீரற்ற வானிலை காரணமாக இரண்டு வீடுகள் முழுமையாகவும் 198 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளதுடன், 439 குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடும் மழையுடன் கூடிய சீரற்ற வானிலை தொடரும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதன்படி, மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என்றும் மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழையை எதிர்பார்க்கலாம் என்றும் திணைக்களம் அறிவித்துள்ளது.

களனி, களுகங்கை மற்றும் அத்தனகலு ஓயா ஆகிய ஆறுகளை அண்மித்த பகுதிகளில் வசிப்பவர்களுக்கு சிறிய வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

களுத்துறை, கேகாலை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தால் விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் அமுலில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் கிளர்ச்சி வெடிக்கும்

“பேபி” மார்களால் தான் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தற்போதைய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார் என்றும் விமல் எம்.பி சுட்டிக்காட்டினார்.

கடந்த அமைச்சரவையில் மூன்று ராஜபக்ஷர்கள் மட்டுமே இருந்தாக குறிப்பிட்ட அவர், இம்முறை அது ஐந்தாகும் என்றும் குறிப்பிட்டார்.

வெட்கம் மற்றும் பயம் இருந்தால் மூன்றையும் வைத்துக் கொள்ளவார்களா என்றும் விமல் எம்.பி கேள்வியெழுப்பியுள்ளார்

## அரசியலில் இருந்து நான் விலகுவேன்

கதிரைகளில் மக்கள் அமர்ந்தும், இடம்போதாதென பலர் நின்றுக்கொண்டிருக்கிறார்கள். எமது மாநாடு நடைபெறும் அன்றைய தினத்திலேயே ஐக்கிய மக்கள் சக்தியும் நாவலபிட்டியில் ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொள்ள வேண்டுமென சஜித் பிரேமதாஸ தொகுதி அமைப்பாளரிடம் கூறியிருக்கிறார்.

இவ்வாறு போராட்டம் ஒன்று நடந்தால் பொதுஜன பெரமுனவின் கூட்டத்துக்கு மக்கள் வர மாட்டார்கள் என்று நினைத்தே சஜித் அவ்வாறு கூறியிருக்கிறார். இதன்படி 148 பேரைக் கொண்ட எதிர்ப்பு போராட்டம் ஒன்றையே அவர்கள் முன்னெடுத்திருக்கிறார்கள். ஆனால், எங்களது மாநாட்டில் 2 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கலந்துகொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

## தண்ணீர் விலையைவிட பால் விலை...

அப்பகுதி பாற்பண்ணையாரள்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சனைகள் தொடர்பில் மேற்படி பாற்பண்ணையில் நேற்று (16) நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

அங்கு அவர்கள் மேலும் தெரிவிக்கையில், “கடந்த காலங்களில் 10 தொடக்கம் 20 லீற்றர் பால் கறக்கும் மாடுகளை வளர்த்து வந்த எமது பண்ணையாளர்கள், தற்போது அனைத்து கால்நடை தீவினங்கள் மற்றும் மருந்துப் பொருட்களின் அதிக விலையேற்றம் காரணமாக மாடுகளை விற்பனை செய்து கொண்டு வருகின்றார்கள்.

இதனால் எமது பகுதியில் பாலுற்பத்தி மிக வேகமாக குறைவடைந்து கொண்டு செல்கின்றது. எமது பண்ணையில் எமது பகுதியிலிருந்து நாளாந்தம், சுமார் 500 லீற்றல் பாலைச் சேகரித்து வந்தோம், தற்போதைய நிலையில் 200 க்கும் குறைவான லீற்றர் பால்தான் ஒரு நாளைக்குச் சேகரிக்கப்படுகின்றது” என்று குறிப்பிட்டனர்.

“தற்போது எமது பண்ணையாளர்கள் மாடு வளர்ப்பை தொடர்ந்து மேற்கொள்வதா கைவிடுவதா என்ற நிலமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் மாடுகளுக்குரிய உணவுகளைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்கள் இருக்கவில்லை மாறாக தற்போது ஒரு லோட் வைக்கோல் 15,000 ரூபாய், ஒரு கிலோ தவிடு 120 ரூபாய் மற்றும் மருந்துகளின் விலைகளும் மூன்று மடங்காக அதிகரித்துள்ளன.

ஒரு லீற்றர் தண்ணீர் போத்தலின் விலை 160 ஆனால் ஒரு லீற்றர் பாலின் விலை 110 ரூபாய். இவ்வாறுதான் நிலமை செல்கின்றது. இச்சூழலில் எம்மால் பாலுற்பத்தியை அதிகரிக்க முடியாமலுள்ளது” என்று தெரிவித்தனர்.

“கிராமிய பொருளாதாரக் கட்டமைப்பை மேம்படுத்த வேண்டும், பாலுற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என அரசாங்கம் சொல்கின்றது. ஆனால் அதனை செயல் வடிவில் கொண்டு வருகின்றார்களில்லை. எமக்கு அரசாங்கம் உதவ முன்வராவிட்டால் எமது பகுதியில் பாலுற்பத்தி இல்லாமல் போகும் நிலமை ஏற்படும்.

பாலுற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என அரசாங்கம் தெரிவித்தபோது எமது பண்ணையாளர்கள் நிதி நிறுவனங்களில் கடன் பெற்று கறவைப் பசுக்களை கொள்வனவு செய்தார்கள். தற்போது பாறுக்கு நியாய விலைய இன்மையால் பெற்ற கடமையும் பண்ணையாளர்கள் மீளச் செலுத்த முடியாத நிலமைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இதனால் எமது வாழ்வாதாரம் முற்றாக வீழ்ச்சியடைந்துள்ளதோடு. எமது பின்னைகளின் கல்வி, சுகாதாரம், உள்ளிட்ட பல விடைங்களில் மாபெரும் கீழ் நிலைக்குத் தள்ளப்படும் நிலமைக்கு ஆளாகியுள்ளோம்.

எனவே அரசாங்கம், பால் விலையை குறைந்தது ஒரு லீற்றருக்கு 200 ரூபாய்க்கு மேலாவது அதிகரிக்க வேண்டும், இல்லையேல் நாம் எமது கால்நடைகள் அனைத்தையும் வீதிக்கு இறக்கி மாபெரும் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வோம்.

எனவே அரசாங்கம் கால்நடைகளின் மருந்துகள், ஏனைய உணவுப்பண்டங்களின் விலைகளைக் குறைக்க வேண்டும். அவ்வாறெனில்தான் எமது பகுதியில் பாலுற்பத்தியை அதிகரிக்க முடியுமே தவிர இல்லையேல் நாங்கள் அனைவரும் மாடு வளர்ப்பைக் கைவிட்ட வேண்டிய நிலமை ஏற்படும். நாங்கள் எமது வாழ்வாதாரமாகவுள்ள கால்நடை வளர்ப்பைக் கைவிடும் பட்சத்தில், அரசாங்கம் எமக்கு மாற்று வாழ்வாதார திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் பின்னிற்கக் கூடாது” எனவும் அப்பகுதி பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

## தான் கொண்டு வந்ததால் தாக்கப்படுகிறார்...

இணையத்தில் மக்கள், மஹிந்த ராஜபக்ஷவை ‘நாக்கி மைனா’ என்றும் தன்னை ‘பொடி மைனா’ என்றும் விமர்சிப்பதாக குறிப்பிட்ட நாமல் எம்.பி, தன்னை மஹிந்த ராஜபக்ஷவின் மகனாக மக்கள் ஏற்றுக்கொண்டமையால் தான் மகிழ்ச்சி அடைவதாக சுட்டிக்காட்டினார்.

2005ஆம் ஆண்டு 5 சதவீதம் பேருக்கு மட்டுமே இணையம் இருந்ததாகவும் மஹிந்த அறிமுகப்படுத்திய இணையத்தை இன்று மக்கள் பயன்படுத்தி அவரை ‘நாக்கி மைனா’ என்று அழைக்கின்றனர் என்றார்.

ரணில் விக்கிரமசிங்க புனர்வாழ்வளிக்கப்பட்டதாகக் கூறப்பட்டதையடுத்து, ஐக்கிய தேசியக் கட்சியினர் குழப்பமடைந்தாக குறிப்பிட்ட நாமல் எம்.பி, அது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய உண்மை என குறிப்பிட்டார்.

ரணில் விக்கிரமசிங்க முன்பு போல் இப்போது மேற்குலகுக்கு விசுவாசமாக இல்லை என்றும் அவர் தூதரகங்களின் விருப்பத்திற்கு ஏற்ப செயல்படவில்லை என்றும் தெரிவித்தார்.

கோட்டாபய ராஜபக்ஷ, மனித உரிமைகளை மதித்த போதிலும், ரணில் விக்கிரமசிங்க காலி முகத்திடலை துடைத்தெறிந்தாகவும் அவர் மனித உரிமைகள் பற்றி இப்போது பேசவில்லை என்றும் குறிப்பிட்டார்.

## உதவி இராஜாங்க செயலாளர் வருகிறார்

அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்க செயலாளர் டொனால்ட் லூ அடுத்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

உதவிச் செயலாளர் டொனால்ட் லூவுடன் அமெரிக்க அரசாங்கத்தின் உயர்மட்டக் குழுவும் வருகைதர உள்ளதாக அறியமுடிகின்றது. தனது இலங்கை விஜயத்தின் போது ஜனாதிபதி உட்பட பல மூத்த அரசாங்க மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களை சந்திப்பார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க ஏஜென்சி நிர்வாகி சமந்தா பவர் மற்றும் ரோமில் உள்ள ஐ.நா உணவு மற்றும் விவசாய நிறுவனங்களுக்கான அமெரிக்க நிரந்தரப் பிரதிநிதி சின்டி மெக்கெய்ன் ஆகியோர் கடந்த மாதம் இலங்கைக்கு விஜயம் செய்து இரண்டு உயர்மட்ட விஜயங்களை அடுத்து இவரும் விஜயம் செய்யவுள்ளார்.

செயலாளர் லு கடந்த மாதம் அமெரிக்க-இந்திய விரிவான உலகளாவிய மூலோபாய பங்காளித்துவத்தை ஆழப்படுத்தும் நோக்கில் இந்தியாவிற்கு ஒரு தூதுக்குழுவை வழிநடத்தி அழைத்துச் சென்றார்.

# அனர்த்த நிவாரணத்தை அவசரமாக வழங்கவும்

## செயலாளர்களுக்கு ஜனாதிபதி ஆலோசனை



சீரற்ற வானிலையால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் ஊடாக நிவாரணங்களை வழங்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென அனைத்து மாவட்டச் செயலாளர்களுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை வழங்கியுள்ளார்.

நிதி அமைச்சின் ஊடாக இதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான உணவு, மருந்து பொருள்களை வழங்குவதற்கு விசேட கவனத்தை செலுத்த வேண்டுமெனவும் ரணில் விக்கிரமசிங்க அனைத்து அதிகாரிகளுக்கும் ஆலோசனை வழங்கியுள்ளார்.

பலத்த காற்று, மண்சரிவு, வெள்ளப்பெருக்கு போன்ற இயற்கை அனர்த்தங்களால், திருகோணமலை, ஹம்பாந்தோட்டை, காலி, கிளிநொச்சி, களுத்துறை, கம்பஹா, கொழும்பு, புத்தளம், இரத்தினபுர, கண்டி, கேகாலை உள்ளிட்ட 11 மாவட்டங்களில் உள்ள 52 பிரதேச செயலங்களைச் சேர்ந்த 15,404 பேர் இதுவரையில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற வானிலைக் காரணமாக இதுவரையில் மூவர் உயிரிழந்துள்ளதோடு, இருவர் காயமடைந்துள்ளனர். 5 வீடுகள் முழுமையாகவும், 193 வீடுகள் பகுதியளவிலும் பாதிக்கப்பட்டுள்ளன.

நாடெங்கிலும் ஏற்பட்ட அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட 439 குடும்பங்களைச் சேர்ந்த 1,927 பேர் நாடு முழுவதிலும் உள்ள 21 மத்திய நிலையங்களில் தற்காலிகமாகத் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

# தேர்தலை பிற்போட அரசாங்கம் முயற்சி



இலங்கையை குறைந்த வருமானம் கொண்ட நாடாக பிரகடனப்படுத்தும் ஆச்சரியத்தக்க முடிவை அமைச்சரவையை கூட்டி அரசாங்கம் எடுத்துள்ளதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இது மிகவும் வருந்தத்தக்க நிலை எனவும், மத்திய தர வருமானம் பெறும் நாட்டைக் குறைந்த வருமானம் கொண்ட நாடாக அமைச்சரவையே பிரகடனப்படுத்தியிருப்பது வரலாற்றில் பதியப்படும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

கண்டி, குண்டசாலை பிரதேசத்தில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் தொகுதிக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது ராஜபக்ஷக்கள் தமது அடியாட்கள் மூலம் அற்புதமான அறிக்கைகளை வெளியிட்டு வருகிறார்கள். அரசாங்கம் பல்வேறு உத்திகளை பிரயோகித்துத் தேர்தலை பிற்போட முயற்சிப்பதாகவும், ஜனாதிபதியும் அதற்கு இணங்குவதாகவும், ஜனாதிபதியின் அந்த இணக்கத்தை மொட்டு ஒரு சேர விரும்புவதாகவும் தெரிவித்தார்.

ஆனால் இந்த திரிபு நிலையை இல்லாதொழிக்கத் தேர்தலொன்று நடத்தப்பட வேண்டும் என்றே ஐக்கிய மக்கள் சக்தி கோருகிறது என்றார்.









# தேர் உற்சவம்

கொழும்பு - தெஹிவளை - நெடுமால் அருள்மிகு ஸ்ரீ வெங்கடேஸ்வரா மஹாவிஷ்ணு மூர்த்தி தேவஸ்தான பிரம்மோற்சவ தேர் உற்சவம் நேற்றுமுன்தினம் (15) இடம்பெற்றது. (ஷண்)

# தேர்தல் ஊடாக ஆட்சியை கைப்பற்ற நாம் தயார்



உள்ளூராட்சிமன்ற தேர்தல்களைக் காலந்தாழ்த்த இடமளிக்கப்போவதில்லை என தெரிவிக்கும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி, தேர்தல் ஊடாக ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்ற தாம் தயார் எனவும் அறிவித்துள்ளார்.

நல்ல மாற்றங்களை எதிர்பார்த்து நீண்டகாலமாக நாட்டு மக்கள் அரசியல் மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறார்கள். எனினும், நாட்டு மக்களால் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றும் ஆட்சியாளர்களுக்கு மக்கள் எதிர்பார்க்கும் நோக்கத்துக்கு அப்பால் வேறொரு நோக்கம் இருந்து வந்திருப்பதால் மக்கள் தொடர்ந்து ஏமாற்றப்பட்டு வருகிறார்கள் எனவும் தெரிவித்தார்.

நாட்டை குறைந்த வருமானம் பெறும் நாடாக அறிவித்திருக்கிறார்கள். பிள்ளைகள் பாடசாலை செல்வது குறைந்துள்ளது. மாணவர்கள் மயக்கமடைந்து கீழே விழுகிறார்கள். வைத்தியசாலைகளில் மருந்து இல்லை. நோயாளர்கள் உயிரிழக்கிறார்கள். நாட்டை இவ்வாறான நிலையில் இருந்து மீட்பதற்கான அனுபவம் எமக்கு இருக்கிறது எனவும் அநுர கூறினார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நாட்டை விட்டு தப்பியோடும் நிலை ஏற்பட்டது. அதுபோல மஹிந்த ராஜபக்ஷவுக்கும் அலரிமாளிகையில் இருந்து திருட்டுத்தனமாக வெளியேறிச் செல்லவும், கடற்படை முகாமில் தஞ்சமடையும் நிலையும் ஏற்பட்டிருந்தது என்றார்.

பசில் ராஜபக்ஷவுக்கு செல்வதற்கு விமானத்தை கூட தேடிக்கொள்ள முடியாத நிலையும் கடந்தக்காலத்தில் ஏற்பட்டிருந்தது. மக்களிடமே அதிகாரம் இருப்பதே இதனூடாக தெரிகிறது. எனினும் மக்கள் சரியான முறையில் ஒன்றிணையவில்லை எனவும் கூறினார்.

தேர்தல் ஊடாக ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு தேசிய மக்கள் சக்தி தயாராகி வருகிறது. ஆனால், இந்த அரசாங்கம் தேர்தலுக்கு அஞ்சுகிறது. உள்ளூராட்சி மன்ற தேர்தலை காலந்தாழ்த்துவதற்கு அரசாங்கம் பல்வேறு உத்திகளை கையாள்கிறது எனவும் குற்றஞ்சுமத்தினார்.

இதேவேளை, பாராளுமன்ற உறுப்பினராகக் கூட வருவதற்கு மக்கள் ஆணையைப் பெறாத ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி ஆசனத்தில் அமர்ந்திருக்கிறார். தேர்தலில் தோல்வியடைந்த ஒருவருக்கு ஜனாதிபதி ஆசனத்தில் அமர தகுதியில்லை எனவும் கூறினார்.



# ஆற்றல் துறையில் ஆதரவளிக்க இலங்கைக்கு தயார்

கஸகஸ்தானில் நடைபெற்ற ஆசியாவில் ஊடாடல், நம்பிக்கையை கட்டியெழுப்புவதுத் தொடர்பான 6ஆவது உச்சி மாநாட்டில் வெளிநாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய கலந்துகொண்டுள்ளார்.

இம்மாநாட்டை வெற்றிகரமாக நடத்தியமைக்காக கஸகஸ்தானுக்கு நன்றி தெரிவித்துள்ள இராஜாங்க அமைச்சர், மின்சாரம், எரிசக்தி துறைகளில் இலங்கைக்கு ஒத்துழைப்பதற்கான வழிகளை ஆராயுமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

கஸகஸ்தான் ஆற்றல் துறையில் இலங்கைக்கு ஆதரவளிக்கத் தயாராக இருப்பதாக அந்நாட்டு பிரதி அமைச்சர் இதன்போது உறுதியளித்துள்ளார்.

இதன்போது, அஸர்பைஜான் குடியரசின் வெளிவிவகார அமைச்சர் ஜெய் ஹன் பைரமோவையும் சந்தித்திருந்த இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, இருநாட்டு உறவுகள், இலங்கையின் தற்போதைய நிலைமை, எரிபொருள் துறையில் தேவைப்படும் உதவிகள் தொடர்பிலும் கலந்துரையாடியுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

# மொட்டு கட்சி கருகிவிட்டது: சிறிகொத்தாவை விற்க முடியாது



ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன அரசியல் ரீதியாக உயிரிழந்துவிட்டது. ஒருவேளை ரணில் விக்கிரமசிங்கவை மொட்டுக் கட்சியின் தலைவராக நியமித்தாலும், அக்கட்சியால் மீண்டெழ முடியாதென, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான சட்டத்தரணி அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (16) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தொடர்ந்து கருத்துரைத்த அவர், நாட்டு மக்களிடமிருந்து அசாதாரண முறையில் வரிகளை அரசாங்கம் அறிவிடுவதால், வாழ்வதற்கான ஆசையே நாட்டு மக்களிடம் இல்லாமல்போகும். அத்தோடு, நாட்டுக்கு முதலீட்டாளர்களும் வரப்போவதில்லை. வாழ்வதற்கான நாடு எனக் கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கம், நாட்டு மக்களை வெளிநாடுகளுக்கு செல்ல வைக்கிறது என்றார்.

அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ள வரி அறவீடுகளால், கிடைத்து வந்த வரிகளும் இல்லாமல்போகும் என்றார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தலை காலந்தாழ்த்துவதற்காக தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென கூறுகிறார். அதுபோல, தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்தப் பாராளுமன்றத்தில் இணக்கப்பாடு எட்டப்படவில்லை என்றால் சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்வேன் என ரணில் கூறுகிறார். இதற்கு அதிகளவான செலவுகள் போகும். தேர்தலைக் காலந்தாழ்த்த ரணில் மேற்கொள்ளும் வெட்கமற்ற செயலே இது என்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவை ரணிலால் விற்பனை செய்ய முடியாது. அது அவரின் சொத்தல்ல. பலர் வழங்கிய நன்கொடைகள், அர்ப்பணிப்புகளால் சிறிகொத்த நிர்மாணிக்கப்பட்டுள்ளது. ஐ.தே.கவின் யாப்பை வேண்டுமென்றால் ரணிலால் மாற்ற முடியும். ஆனால், சிறிகொத்தவை விற்பனை செய்ய ரணில் முயற்சித்தால் அவரின் இறுதிக்காலமாகவே அது இருக்கும் எனவும் தெரிவித்தார்.


## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9 (1) ஆம் பிரிவின் கீழ் கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

நிக்கிமோ டிரேடிங் (பீவீீ) எல்டீடி
பீ - வி 00214669
இல. 190/1/b, அகுரன சொப்பிங் கொம்லெக்ஸ், அகுரன.

ரிஜென்ட் வெடிங் கார்ட்ஸ் (பீவீீ) எல்டீடி
பீ - வி 00258184
இல. 62, டி.எஸ்.சேனாநாயக்க வீதி, கண்டி.

ட்ரிலியன் கனெக்ட் (பீவீீ) எல்டீடி
பீ - வி 00263625
இல. 603, ஜன ஜய சிட்டி மோல், ராஜகிரிய.

ஜிஜஎம் லொஜிஸ்டிக்ஸ் (பீவீீ) எல்டீடி
பீ - வி 00264231
இல. 101/4, கலல்கொட வீதி, பன்னிபிடிய.

நோவெல் கொர் இனோவேஷன் (பிரைவட்) லிமிட்டட்
பீ - வி 89248
இல. 61/b/1, பெரகும் மாவத்தை, பண்டாரவத்த, கம்பஹா.
கம்பனியின் புதிய பெயர்
நோவெல்கொர் இனோவேஷன் (பிரைவட்) லிமிட்டட்

**பணிப்பாளர்கள்**




# ஸ்ரீதாமோதர பூஜை

கொட்டாஞ்சேனை ஸ்ரீஸ்ரீ இராதாகிருஸ்ண ஆலயத்தில் ஸ்ரீதாமோதர பூஜை தினமும் மாலை 6 மணிக்கு ஸ்ரீதாமோதரருக்கு நெய் விளக்கேற்றும் வைபவம் நடைபெற்று வருகிறது. கடந்த 9ஆம் திகதி ஆரம்பமான இந்த வைபவம் அடுத்த மாதம் 7ஆம் திகதி வரையில் நடைபெறும்.


## ரிதிமாலியத்த பிரதேச சபை

**2023 ஆண்டுக்கான வரவு செலவு வரைவு ஆவணத்தை பரிசீலனை செய்வதற்காக பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்ற அறிவித்தல்.**

1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் படி மற்றும் 2020 பிரதேச சபை வரவு செலவு வெளியீடு மற்றும் நடைமுறைப்படுத்தும் விதிக்கு அமைவாக 2023 ஆண்டின் வரவு செலவு வரைவு ஆவணம் 2022.10.17 ஆம் திகதி தொடக்கம் 2022.10.26 ஆம் திகதி வரை வாரத்தின் கடமை தினங்களில் மு.ப.09.00 தொடக்கம் பி.ப.03.00 வரை பிரதேச எல்லையிலுள்ள பொது மக்கள் பரிசீலனை செய்வதற்காக சபை காரியாலயத்தின் வளாகத்தில் மற்றும் ரிதிமாலியத்த பொது நூலக வளாகத்தில் வைக்கப்பட்டுள்ளதாக இதன் மூலம் அறிவிக்கிறேன்.

தொலைப்பேசி இல – 0552268124
மின்னஞ்சல் - rideemaliyaddaps@gmail.com

நிஷாந்த ஜயசுந்தர,
தவிசாளர்,
**ரிதிமாலியத்த பிரதேச சபை**
**ஆந்தாஉல்பத – ஊரணிய**

# இருப்புக்கு கலையே முக்கிய பங்காகும்



எப்.முபாரக்

நாட்டினதும் இனத்தினதும் மற்றும் உலகத்தின் இருப்புக்கு கலை மிக முக்கிய பங்கு வகிக்கிறது என திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பி. எச். என். ஜயவிக்ரம தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட கலை இலக்கிய பெருவிழா மற்றும் இந்து பாரம்பரிய கலைஞர் கௌரவிப்பு விழா நிகழ்வுகள் சனிக்கிழமை (15) மாவட்ட செயலகத்தில் நடைபெற்றபோதே அரசாங்க அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், சிறிய வயதில் கலைத்திறமைகளை வெளிக்கொணர்வதன் மூலம் எதிர்காலத்திலும் கலைத்துறைக்கு பங்களிப்பு செய்யக்கூடியவர்களாக மிளிரலாம். கலைத்துறையில் பல சாதனைகளை படைக்க இவ்வாறான வாய்ப்புக்கள் ஏதுவாக அமைகின்றன என்றார்.

பிரதேச மட்ட கலை இலக்கிய விழாவில் முதலாம் இடம் பெற்றவர்கள் மாவட்ட மட்ட போட்டிக்கு தெரிவு செய்யப்படுவதுடன் மாவட்ட மட்டப்போட்டிகளில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களை பெற்ற 113 பேர் இதன்போது சான்றிதழ் மற்றும் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். பாடசாலை மட்ட போட்டி மற்றும் திறந்த போட்டி என்றடிப்படையில் இப்போட்டிகள் நடைபெற்றன.

இந்நிலையில், இந்து பாரம்பரியத்துக்கு ஆற்றிய சேவைக்காக 32 கலைஞர்கள் இதன்போது பொன்னாடை அணிவிக்கப்பட்டு நினைவுச்சின்னம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

# அங்குராப்பன நிகழ்வு

நூருல் ஹுதா உமர்



முதியோர், வலது குறைந்த நிலையில் உள்ளோர் மற்றும் சிறுநீரக நோயாளிகளுக்காக மாதாந்தம் வழங்கப்படும் நிதியுதவிக் கொடுப்பனவுகளை செப்டம்பர் மாதம் தொடக்கம் சமுர்த்தி வங்கியின் சேமிப்புக்கணக்கின் ஊடாக வழங்கும் அங்குராப்பன நிகழ்வு சாய்ந்தமருது சமுர்த்தி வங்கியில் பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சமுர்த்தி தலைமை பீட முகாமையாளர் ஏ.சி.ஏ. நஜீம், சமுர்த்தி வங்கி முகாமையாளர் எஸ். றிபாயா, சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர் ஏ.எல். யு.ஜுனைதா, சமூக சேவை பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.ஐ. பஸ்மியா, சமூக சேவை பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எம். எப் .சியாமி உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவில் 2000 ரூபாய் முதியோர் கொடுப்பனவு 637 நபர்களுக்கும், 5000 ரூபாய் வலது குறைந்தோர் கொடுப்பனவு 193 நபர் களுக்கும், 5000 ரூபாய் சிறுநீரக நோயாளிக்கான உதவி கொடுப்பனவு 32 நபர்களுக்கும் சமுர்த்தி வங்கி கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ச்சியாக ஒவ்வொரு மாதமும் வழங்கப்பட வுள்ளது குறிப்பிடத்தக்கது.

# நிரந்தர வீடு வழங்கி வைப்பு

ஹஸ்பர்

வாழ்வதற்கான இல்லறம் செயற்றிட்டத்தின் கீழ் வன்னி ஹோப் நிறுவனத்தின் ஒழுங்கமைப்பில் கனடா நாட்டில் வசிக்கும் யசோ மற்றும் தேவின் நிதி அனுசரணையில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பெண் தலைமை தாங்கும் குடும்பத்திற்கு நிரந்தர வீட்டை நிர்மாணித்து அவற்றினை பயனாளிக்கு கையளிக்கும் நிகழ்வு மக்கள் சேவை மன்றத்தின் தலைவர் எம்.டீ.எம்.பாரிஸ் தலைமையில் நேற்று (16) நடைபெற்றது

திருகோணமலை மூதூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட சம்பூர் எனும் பின்தங்கிய கிராமத்தில் வசிக்கின்ற மிக நீண்டகாலம் மண் குடிசைகளில் அடிப்படை வசதிகளின்றி வாழும் பெண் தலைமை தாங்கும் குடும்பத்திற்கே இந்த நிரந்தர வீடு கையளிக்கப்பட்டுள்ளது.

அந்த குடும்பத்தில் கல்விப் பயிலும் மாணவி துவாராக, வன்னி ஹோப் நிறுவனத்தின் புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் 4 வருடங்களாக புலமைப் பரிசில் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் வன்னி ஹோப் அவுஸ்திரேலியா மற்றும் மக்கள் சேவை மன்ற உத்தியோகத்தர்கள் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கதாகும்

# “தம்பலகாமம் ஊர்ப்பெயர் ஆய்வு” நூல் வெளியீட்டு வைப்பு

எப்.முபாரக்

வைத்தியர் தங்கராசா ஜீவராஜின் “தம்பலகாமம் ஊர்ப்பெயர் ஆய்வு” எனும் நூல் வெளியீட்டு நிகழ்வானது திருகோணமலை நகரசபை மண்டப அரங்கில் நேற்று (16) ஞாயிற்றுக்கிழமை மணியளவில் இடம்பெற்றது..

தம்பலகாமம் பிரதேச செயலாளரான திருமதி ஜே.சிறீபதி தலைமையில் இடம்பெற்ற நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக

திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், சிறப்பு விருந்தினராக திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரான வைத்தியர் வி.பிரேமானந் கலந்து சிறப்பித்தனர்..

கலாபூசணம் வே.தங்கராசா வெளியீட்டுரையையை நிகழ்தினார்.அறிமுகவுரையை கலாநிதி சிறீ ஞானேஸ்வரன்,

கருத்துரையை சற்குணம் சத்தியதேவன், ஏற்புரையையும் நன்றி நவிலலையும் வைத்தியர் த.ஜீவராஜ் வழங்கினர்..

# மயிரிழையில் தப்பிய குடும்பம்

மட்டக்களப்பு மாவட்டம் படுவாங்கரைப் பெரு நிலப்பரப்புக்குட்பட்ட போரதீவுப் பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவின் விழாந்தோட்டம், கண்ணபுரம் கிழக்கு ஆகிய கிராமங்களுக்குள் ஞாயிற்றுக்கிழமை(16) புகுந்த காட்டுயானைகள் அங்கிருந்த வாழை, தென்னை, உள்ளிட்ட பயன்தரும் மரங்களை அழித்துள்ளதுடன், மக்கள் குடியிருக்கும் வீடுகளையும் உடைத்து பொருட்களையும் சேதப்படுத்திவிட்டுச் சென்றுள்ளன.

அதிகாலை ஒரு மணியளவில் புகுந்த காட்டுயானைகளை விரட்டுவதற்கு மக்கள் மிகுந்த பிரயத்தனம் மேற்கொண்டுள்ளனர்,



தீப்பந்தம் ஏந்தியும், பட்டாசுகள் கொளுத்தியும், யானைகள் செல்லவில்லை. ஆனாலும் கண்ணபுரம் கிழக்கு கிராமத்திலுள்ள வீடொன்றினை முற்றாக உடைத்து சேதப்படுத்தியுள்ளதுடன் அங்கீருந்த நெல் மூட்டைகளையும் இழுத்துச் சென்றுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கினறனர்.

இந்நிலையில் விளாந்தோட்டம் கிராமத்தில் புகுந்த காட்டுயானைகள் வயது முதிந்த கணவன், மனைவி மற்றும் அவர்களது பேரப்பிள்ளையும் இருந்துள்ளார்கள், அவர்களின் வீட்டை உடைத்து வீட்டின் சுவரையும் இடித்துவிட்டுச் சென்றுள்ளது. சுவர் இடிந்த விழுந்ததில் அவர்கள் மயிரிழையில் உயிர் பிழைத்ததாகத் தெரிவிக்கின்றனர்.

எனினும் யானைகள் ஒருவாறு அதிகாலை இரண்டு மணியளவில் கிராமங்களை விட்டு நகர்ந்ததாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றர்.

# போதை மாத்திரைகள் விற்ற வியாபாரிகள்

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் நகரத்தில் 1,000 போதை மாத்திரைகள் மற்றும் ஒரு தொகை ஹெரோய்ன் போதைப்பொருளுடன் நான்கு வியாபாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் யாழ்.நகர் பகுதியில் உள்ள மூன்று புடவைக்கடைகளில் வேலை செய்து கொண்டு , போதை



மாத்திரைகள் மற்றும் ஹெரோய்ன் போதைப்பொருளை விற்பனை செய்து வந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர். குறித்த நபர்களை யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# கடலட்டை குஞ்சு பொரிக்கும் நிலையங்களை நிறுவ பேச்சு

றொசேரியன் லெம்பர்ட்



இந்திய தனியார் முதலீட்டாளர்களின் பங்களிப்புடன் கடலட்டை பண்ணைகளுக்கு தேவையான கடலட்டை குஞ்சு பொரிக்கும் நிலையங்கள் அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் மன்னாரில் இடம் பெற்றது.

நக்டா நிறுவனத்தினால் செயற்படுத்தப்படுகின்ற ஓலைத்தொடுவாய் கடலட்டை குஞ்சு பொரிக்கும் நிலையத்திற்கும் இந்திய முதலீட்டாளர்களின் தொழில்நுட்பங்களை உள்வாங்கி,அதன் உற்பத்தி திறனை அதிகரிக்க விரும்பிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, குறித்த முதலீட்டாளர்களை ஓலைத்தொடுவாய் குஞ்சு கருத்தரிப்பு நிலையத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

கடற்றொழில் சார் மக்களுக்கு நிலையான பொருளாதார கட்டமைப்புக்களை உருவாக்கும் நோக்கில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியில், பிரதேச மக்களால் உருவாக்கப்பட்டு வருகின்ற கடலட்டை பண்ணைகளுக்கான கடலட்டை குஞ்சுகளின் தேவை அதிகரித்துள்ள நிலையில், இக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

# தடுமாறி விழுந்தே உயிரிழந்துள்ளார்

எம். றொசாந்த்

யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியில் வேம்படி சந்திக்கருகில் நிர்மாணிக்கப்படும் கட்டிடத் தொகுதியிலிருந்து சடலமாக மீட்கப்பட்டவர், நிலைதடுமாறி படிக்கட்டுகளில் விழுந்து தலையில் ஏற்பட்ட படுகாயம் காரணமாகவே உயிரிழந்துள்ளார் என விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் இடம்பெற்ற விசாரணையின் போது அங்கு பொருத்தப்பட்டிருந்த சிசிரிவி காணொளி பதிவின் மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் பதிவாகிய சிசிரிவி காணொளி பதிவை சான்றுப்பொருளாக நீதிமன்றில் முற்படுத்த உத்தரவிட்ட நீதிவான், சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்க கட்டளையிட்டார்.

யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்த அன்னலிங்கம் கிரிசாந்தன் (வயது-38) என்ற அலுமினிய தள வேலை ஒப்பந்தக்காரரே இவ்வாறு உயிரிழந்தார்.



# 5.5 பவுண்களுடன் இருவர் கைது

யாழ்.பருத்தித்துறையில் மோட்டார் சைக்கிளை திருடிக்கொண்டு வீதியால் சென்ற பெண்ணின் சங்கிலியை அறுத்த நபர் உட்பட இருவர் 5.5 பவுண் தங்க நகையுடன் கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த நபர்கள் பெறுமதியான கைத் தொலைபேசி ஒன்றையும் திருடிச் சென்றிருந்த நிலையில் அது குறித்து விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டிருப்பதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலும் நகைத் திருட்டில் ஈடுபட்டவர்களுக்கு வேறு பல கொள்ளை சம்பவங்களுடன் தொடர்பிருக்கலாம் என சந்தேகிக்கும் பொலிஸார் அது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



# விழிப்புணர்வு பேரணி

சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினமான ஒக்டோபர் 15ஆம் திகதியன்று யாழ்ப்பாணம் சுன்னாகத்தில் வாழ்வகம் மற்றும் லயன்ஸ் கழகம் ஆகிய இணைந்து விழிப்புணர்வு பேரணியை நடாத்தியது.

சுன்னாகம் நகரில் காலை 9 மணியளவில் ஆரம்பமான பேரணி, சுன்னாகம் பஸ் தரிப்பு நிலையம் வழியாக வாழ்வகத்தை சென்றடைந்தது.

வெள்ளைப் பிரம்பின் முக்கியத்துவம், விழிப்புலனற்றவர்கள் வீதியில் நடமாடுவதற்கு இருக்கின்ற இடையூறுகள், அவர்களை ஏன் முன்னுரிமைப்படுத்த வேண்டும் போன்ற விடயங்கள் இதன்போது வலியுறுத்தப்பட்டன.

(எம். றொசாந்த்)

# யாழ். மாவட்டத்திலும் கலந்துரையாடல்

நிதர்சன் வினோத்

சமூக நீதிக்கான தேசிய இயக்கம் மற்றும் இன மத நல்லிணக்கத்துக்கான கூட்டமைப்பின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டத்துக்கான மக்கள் கலந்துரையாடல், யாழிலுள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

“சுபீட்சமான நாட்டிற்கான பாதை நல்லிணக்கமே” எனும் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றது.




இதன்போது யாழ்ப்பாணத்தில் உள்ள பல்வேறு பிரச்சினைகள் மற்றும் சமகால விடயங்கள் தொடர்பாக கருத்து தெரிவிக்கப்பட்டது.

சமூக நீதிக்கான தேசிய இயக்கத் தலைவர் கரு ஜயசூரிய, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், த.சித்தார்த்தன், பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா , விஜயகலா மகேஸ்வரன் உள்ளிட்ட அரசியல் பிரதிநிதிகள், சமயத்தலைவர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், எனப்பலரும் கலந்துகொண்டனர்.

# கணினிகள் வழங்கப்பட்டன...

சங்கர் ராஜி நினைவு அறக்கட்டளை ஊடாக, நானுஓயா– எபஸ்போர்ட் மற்றும் கார்லிபேக் ஆகிய பாடசாலைகளுக்கு அன்பளிப்பாக கணினிகள் வழங்கப்பட்டன.

(பி.கேதீஸ்)







# உலருணவுப்பொருட்கள் வழங்கி வைப்பு...

பெண் தலைமைத்துவம் ஏற்று நடத்தும் நுவரெலியா, கந்தப்பளை மற்றும் நானுஓயா பிரதேசங்களைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 30 குடும்பங்களுக்கு, சேவக சங்கம் மற்றும் இலங்கை சேவா சர்வதேச அறக்கட்டளை ஊடாக சேவா அமெரிக்கா நிதியுதவியுடன் உலருணவு பொதிகள் வழங்கப்பட்டன.

(எஸ். கே. குமார்)







பெருந்தோட்ட கம்பனிகளின் அடாவடி நடவடிக்கைகளை

# நிறுத்திக்கொள்ள வேண்டும்

## எச்சரிக்கிறார் இராஜாராம்

■ எஸ்.கே.குமார்



பெருந்தோட்ட கம்பனிகளின் சர்வாதிகார அடாவடி நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்ள வேண்டும்.இல்லாவிட்டால் தீபாவளி பண்டிகைக்கு பின் பாரிய தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு முகம் கொடுக்க நேரிடும் என, முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளருமான ஆர். இராஜாராம் தெரிவித்துள்ளார்.

தோட்ட நிர்வாகங்களின் எல்லையற்ற அதிகாரங்களின் காரணமாக தோட்டங்களில் வாழுகின்ற மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர் என தெரிவித்துள்ளார்.

இதனால் தோட்ட நிர்வாகிகள் தமது அதிகார எல்லையை தேயிலை பயிரிடப்பட்ட நிலங்களுடன் நிறுத்திக் கொள்ள வேண்டும் . தொழிலாளர்களுக்கு இடையூறுகள் ஏற்படுத்தகூடாது.

தற்போது தோட்டங்களில் குடியிருப்பாளர்களாக வாழ்கின்றவர்களில் சுமார் 50 சதவீதத்திற்கு மேற்பட்டவர்கள் தோட்டங்களில் வேலை செய்யாதவர்களாக இருக்கின்றனர்.

இவர்களின் நலன்கள் தொடர்பில் தோட்ட நிர்வாகங்கள் அக்கறை செலுத்துவதில்லை. தோட்டங்களில் வேலை செய்யாத தோட்ட குடியிருப்பாளர்கள் தமது வாழ்வாதாரங் களை கொண்டு நடத்துவதற்கு சுயத்தொழில் செய்வதற்கு முற்படுகின்ற போது பல்வேறு இடையூறுகளை தோட்ட நிர்வாகங்கள் ஏற்படுத்துவதுடன், அதற்கு தடையாகவும் இருக்கின்றன என்றார்.

பெருந்தோட்டங்களில் வேலை செய்பவர்கள் தொடர்ச்சியாக அதிலேயே வேலை செய்ய வேண்டும் என எவரும் எதிர்பார்க்கக் கூடாது. அவர்கள் படித்தவர்களாகவும் பல்வேறு துறைகளில் பாண்டித்தியம் பெற்றவர்களாகவும் மாறி வருகின்றனர். இவர்களுக்கு எதிராக சத்தமில்லாமல் அச்சுறுத்தல் ஆங்காங்கே நடைபெற்று வருகின்றது. இவற்றை ஆரம்பத்திலேயே இனங்கண்டு அவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டியது எமது கடமையாகக் கருதுகிறோம்.

மின்சாரம் தாக்கி உயிரிழந்தவரின்

# குடும்ப உறுப்பினர் ஒருவருக்கு பதவி

■ எம். செல்வராஜா



பசறை கனவரல்ல - ஈ.ஜீ. கே. பிரிவில் மின்சாரம் தாக்கி பலியான 25 வயதுடைய தமிழரசன் கணேசமூர்த்தியின் இறுதிக்கிரியைகள் தோட்ட மயானத்தில் நேற்று முன்தினம் (15) மாலை நடைபெற்றன.

பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், இலங்கை தேசிய தோட்டத்தொழிலாளர் சங்கப்பொதுச்செயலாளருமான வடிவேல் சுரேஸ் , பசறை பிரதேச சபை உறுப்பினர் எஸ். கார்த்தீஸ்வரன் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

இந்த இளைஞனின் இறுதிக்கிரியைகளை மேற்கொள்ள, தோட்ட நிர்வாகம் 15 ஆயிரம் ரூபாய் பணத்தை இன்று (17) வழங்குவதாகவும் , மரணமான இளைஞனின் குடும்பத்தில் ஒருவருக்கு , தோட்ட உத்தியோகத்தர் பதவி வழங்குவதாகவும் ஒப்புக்கொண்டுள்ளது.

அத்துடன், மரணமானவருக்கு ஏனைய இழப்பீடுகளைப்பெற்று கொடுக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இம் மரணம் தொடர்பில், தோட்ட உத்தியோகத்தர்கள் இருவர் கைது செய்யப்பட்டு, பிணையில் விடப்பட்டுள்ளனர். இது தொடர்பான வழக்கு, எதிர்வரும் 3ஆம் திகதி பதுளை நீதவான் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

# தனிமையில் இருந்த பெண் சடலமாக மீட்பு

■ ஷேன் செனவிரத்ன

பேராதனைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட யஹலதென்ன பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் தனியாக வசித்து வந்த பெண்ணொருவர் சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்தமை தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அந்த வீட்டில் தனியாக வசித்து வந்த 65 வயது மதிக்கத்தக்க பெண் தொடர்பில் எந்த தகவலும் இல்லாததால், 14ஆம் திகதி வீட்டை சோதனை செய்தபோது, வீட்டுக்குள் சடலமாக கிடந்த பெண்ணை பார்த்து அப்பகுதி மக்கள் பொலிஸாருக்கு தகவல் தெரிவித்துள்ளனர்.

அப்பெண் அடித்து கொலை செய்யப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளதுடன்,கடந்த 14ஆம் திகதி மாலை 06 மணி முதல் மறுநாள் 09ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இக்கொலை இடம்பெற்றிருக்கலாம் என சந்தேகிக்கின்றனர்.

நீதவான் சம்பவ இடத்தில் வைத்து விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர், பெண்ணின் சடலம் பிரேத பரிசோதனைக்காக பேராதனைப் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பேராதனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மாணிக்கக்கல் அகழ்ந்த எண்மர் கைது

■ ரஞ்சித் ராஜபக்ஷ

கெசல்கமுவ ஓயாவில் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட 08 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். நேற்று (16) அதிகாலை இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் பொகவந்தலாவை- தெரேசியா தோட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்கள் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.



சந்தேகநபர்களுக்கு எதிராக ஹட்டன் நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# மவுண்ட்ஜின் தோட்ட இளைஞனை கண்டீர்களா

வட்டவளை- மவுண்ட்ஜின் தோட்டத்தைச் சேர்ந்த 26 வயதான வடிவேல் திலீப்குமார் , காணாமல் போய் 11 நாட்கள் கடந்துள்ள நிலையில் அவர் தொடர்பில் எவ்விதமான தகவல்களும் கிடைக்கவில்லையென பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

மிரிஹான பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

நுகேகொடை- தெல்கந்த பகுதியில் உள்ள ஹோட்டலில் பணியாற்றி வந்த அந்த இளைஞன், இந்த மாதம் 5ஆம் திகதி காலை 10 மணியளவில் விடுமுறைப் பெற்றுக்கொண்டு வீட்டுக்குச் செல்வதாகத் தெரிவித்துள்ளார். எனினும்,இதுவரை வீட்டுக்கு வரவில்லை என்றும் அவரது கையடக்க தொலைபேசியும் இயங்கவில்லை என்றும் அவரது வீட்டார் தெரிவித்துள்ளனர்.

எனவே, இவர் பற்றிய தகவல்கள் தெரிந்தால் 0779052121,



0775653714,0767636146 ஆகிய இலக்கங்களுக்கு தொடர்புகொள்ளுமாறும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இதேவேளை, காணாமல்போன இளைஞர் வேலை செய்துவந்த ஹோட்டல் உரிமையாளரும் இச்சம்பவம் தொடர்பில் மிரிஹான பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றைப் பதிவு செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும், காணாமல்போன இளைஞர் தொடர்பான அறிக்கையை நுகேகொட நீதவான் நீதிமன்றத்தில் மிரிஹான பொலிஸார் இன்று (17) சமர்ப்பிக்க உள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# வீட்டுரிமை கோரி கையெழுத்து வேட்டை

■ மெய்யன், ஆ.ரமேஸ்

மலைய பெருந்தோட்ட தொழிலாளர் சமூகத்தில் வீடற்ற மக்களுக்கு 1987 ஆம் ஆண்டுக்கு பின் 37 ஆயிரம் வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டாலும் இதுவரை அவர்களுக்கான வீட்டுரிமை வழங்கப்படவில்லை.

எனவே, இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வருவதற்காக கண்டி சமூக அபிவிருத்தி நிறுவனம் மலையகம் முழுவதும் கையெழுத்து திரட்டும் நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றது.

அந்த வகையில் கந்தப்பளை,



நுவரெலியா, மடுல்கலை, டீமலை ஆகிய இடங்களில் இவ்வாறு கையெழுத்து பெரும் நடவடிக்கை நேற்று (16) முன்னெடுக்கப்பட்டதுடன், கடும் மழையையும் பொரட்டுபடுத்தாது மக்கள் கையெழுத்திட்டனர்.

பிரதான வீதியில் கிடக்கும்

# மண்மேட்டினை அகற்ற கோரிக்கை

■ டி.சந்ரு

கடந்த சில நாட்களாக பெய்து வரும் தொடர் மழை காரணமாக, நுவரெலியா -தலவாக்கலை பிரதான வீதியில் வீதியோரங்களில் ஆங்காங்கே பல இடங்களில் மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளன.

இதனால் ஏ7 பிரதான வீதியில் குறிப்பாக நானுஓயா- டெஸ்போட் வீதி, வீதி மண் சரிவு காரணமாக பல இடங்களில் ஒரு வழியாக மாற்றப்பட்டுள்ளது.

பிரதான வீதியில் சரிந்து கிடக்கும் மண் மேடுகள் அகற்றப்படாமையால் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டு



வருவதால், மண் மேட்டினை அகற்றி, விபத்தொன்று ஏற்படுவதற்கு முன் வீதியினை சீரமைக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என பிரதேசவாசிகள்,சாரதிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# மலையக மக்கள் இன்னும் அடிமைகளாகவே உள்ளனர்

■ ஆர்.பிரபா

மலையக மக்கள் இலங்கைக்கு வருகை தந்து 200 வருடங்களை கடக்கும் நிலையில்,அவர்களுக்கு எந்தவோர் உரிமையையும் எந்தவோர் அரசாங்கமும் கொடுக்கவில்லை எனவும், இதன் விளைவாக நிலம் உரிமை, மொழி உரிமை, கலாசார உரிமை அனைத்தையும் இழந்து நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்து ஹட்டனில் நேற்று (16) எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மலையக மக்களின் மரபை பாதுகாக்கும் அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா. சக்திவேல் தலைமையில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இலங்கையின் பொருளாதாரத்துக்கு முதுகெலும்பாய் பங்காற்றியவர்களின் வாழ்வு நிலை இன்று அடிமை நிலையில் உள்ளதென ஐ.நா பிரதிநிதியொருவர் தெரிவித்துள்ளார் என அருட்தந்தை மா. சக்திவேல், இதன்போது தெரிவித்தார்.

150 வருடம் பழமைவாய்ந்த லயன்களில் இந்த மக்கள் வாழ்ந்துக் கொண்டு இருக்கின்றார்கள். எனினும், ஏனைய மக்களுக்கு காணி உரிமை கொடுக்கப்படுகின்றது என்றும் தெரிவித்தார்.

இந்த போராட்டத்தில் பொது மக்கள், சமூக அமைப்பின் பிரதிநிதிகள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலரும் இதில் கலந்து கொண்டனர்.



# வியாபாரத்தை தக்கவைக்க தரங்களை அல்ல: விலைகளைக் குறைக்கவும்

ஒவ்வொரு துறைகளும் நீடித்து நிலைக்கவேண்டுமாயின். அந்தந்த துறைகளைச் சார்ந்த நுகர்வோரை கவர்ந்திழுத்து வைத்துக்கொள்ளவேண்டும். அத்துடன், ஒரு பொருளுக்கான கேள்வியெழும்பும் போது அப்பொருள், அந்த வர்த்தக நிலையத்தில் இருக்கவேண்டும். இல்லையேல் மாற்று வழிகளை நுகர்வோர் தேடிச் சென்றுவிடுவர்.

பிஸ்கட் வகைகளின் விலைகள் தலைக்குமேல் எகிறி நின்றமையால், காலை, மாலை வேளைகளில் தேநீருடன் பிஸ்கட்டுகளைக் கடித்தவர்கள், அதனைக் கைவிட்டுவிட்டனர். இதனால், பிஸ்கட் விற்பனையில் கடுமையான வீழ்ச்சி ஏற்பட்டது. வர்த்தக நிலையங்களின் கண்ணாடி இறாக்கைகள் சிலவேளைகளில் வெறிச்சோடிக் கிடந்தன. இல்லையேல், அடுக்கப்பட்ட பிஸ்கட்டுகள் அப்படியே இருந்தன.

இதனிடையே அதிரடியான தீர்மானத்தை எடுத்த பிஸ்கட் கம்பனிகள், பிஸ்கட்களின் விலைகளை கொஞ்சமாகக் குறைத்தன. எனினும், விற்பனையில் எந்தவிதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை. ஏனெனில், விலைகளைக் குறைத்தது மட்டுமன்றி, ஒரு பக்கட்டில் இருந்த பிஸ்கட்டுகளின் எண்ணிக்கையையும் சில நிறுவனங்கள் குறைத்துவிட்டன.

இதனை அறிந்துகொண்ட நுகர்வோர், அவற்றை கொள்வனவு செய்வதை தவிர்த்து வந்தனர். இதுபோன்ற நிலைமைகள் ஏனைய உற்பத்திப் பொருட்களுக்கும் ஏற்பட்டுவிடக்கூடாது. கோதுமை மாவின் விலையில் சடுதியான மாற்றம் செய்யப்பட்டு, விலைகள் குறைக்கப்பட்டன.

எனினும், கோதுமை மாவினால் தயாரிக்கப்படும் உணவுப்பொருட்களின் விலைகளில் (கொத்து ரொட்டி தவிர) எவ்விதமான மாற்றங்களும் நேற்று (16) வரையிலும் செய்யப்படவில்லை. அதன் முழுமையான இலாபத்தை தங்களுடைய இலாச்சிகளுக்குள் இழுத்துக்கொள்வதற்கே ஒருசில பெரும் முதலைகள் முயலுகின்றன.

கோதுமை மாவின் விலை அதிகரிக்கப்பட்டபோது, உடனடியாகவே விலைகளை அதிகரித்தது மட்டுமன்றி, அதன் தரத்தையும் குறைத்துக்கொண்டன. இதனால், பெரும்பாலான ஹோட்டல்கள், சிற்றுண்டிச்சாலைகளை இழுத்து மூடவேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதனால், அங்கு பணியாற்றியவர்களும் வேலைகளை இழந்தனர்.

சில ஹோட்டல்களில் பழைய கையிருப்பு இன்னும் இருக்கின்றன என்றும், நாங்கள் மொத்த விற்பனை நிலையங்களுக்கு சென்று கோதுமை மாவைக் கொள்வனவு செய்யவில்லை. சில்லறைக் கடைகளில்தான் வாங்கினோம் என மழுப்பலான பதில்கள் தெரிவிக்கப்படுகின்றன. இதனால், நுர்வோருக்கே பெரும் பாதிப்பு ஏற்படுகின்றது என்பதுடன் நுகர்வோரை இழக்கவேண்டிய நிலைமை ஏற்படும்.

விலைகளை அதிரடியாக அதிகரிக்கும் அரசாங்கம், விலைகளை குறைக்கும்போது, குறைந்த விலைகளுக்கு அப்பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றனவா என்பதை தேடியறிந்து பார்த்துக் கொள்ளவேண்டும். இல்லையேல், அரசாங்கத்தின் மீதான விமர்சனங்கள் அதிகரித்துக்கொண்டே செல்லும்.

தற்போதையை சூழ்நிலையில் நுகர்வோரை கவர்ந்து இழுக்கவேண்டுமாயின், அரைவாசிக்கு மேல், தள்ளுபடி செய்யவேண்டும். அது தற்போதைய சூழ்நிலையில் சாத்தியப்படாது.

என்றாலும், இருக்கும் நுகர்வோரை காப்பாற்றிக்கொண்டு, வர்த்தகத்தையும் தக்கவைத்துக் கொள்ள வேண்டுமாயின் பொருட்களின் தரங்களைக் குறைக்காமல், விலைகள் குறைக்கப்படும்போது குறைக்கவேண்டும். இல்லையேல் இழப்பதை தவிர வேறு வழியே இல்லை என்பதை நினைவில் கொள்க.




தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# அதிகரிக்கும் வரிகள் - நியாயமா, கொள்ளையா?



என்.கே.அஷோக்பரன்
Twitter: @nkashokbharan

“வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும் கோலொடு நின்றான் இரவு” என்றார் வள்ளுவர். தண்டிக்கும் இயல்போடு ஆட்சியாளன் தன் குடிகளிடம் வரி கேட்பது, ஆயுதத்தைப் பிடித்துக் கொண்டு நெடுவழிப் பயணிகளிடம் பணத்தைப் போடு என்று மிரட்டுவதற்குச் சமம் என்ற வள்ளுவனின் கருத்து, 1776ல் அடம் ஸ்மித் குறிப்பிட்ட நவீன வரியின் கோட்பாடுகளான நியாயத்தன்மை, நிச்சயத்தன்மை, வசதி, மற்றும் செயற்திறன் என்பதோடு ஒத்தியைகிறது.

வரி என்பது ஒரு அரசிற்கு இன்றியமையாததொன்று. ஆனால் அந்த வரியானது மக்களைத் தண்டிப்பதாக அமைந்துவிடக்கூடாது என்பது வரியின் அடிப்படை இயல்பாக அமையவேண்டும். இல்லையென்றால் வழிப்பறிக்கொள்ளைக்காரனுக்கும், அரசிற்கும் பெரிய வித்தியாசம் இருக்க முடியாது.

அரசு ஒன்று இயங்குவதற்கு பணம் தேவை. அந்தப் பணம் வரிகளினூடாகவே பிரதானமாகப் பெற்றுக்கொள்ளப்படுகிறது. வரிகளை பிரதானமாக நேரடி வரிகள், மறைமுக வரிகள் என்று இருவகைப்படுத்தலாம். நேரடி வரிகள் முதன்மையாக தனிநபர்கள் மீதான வரிகளாகும், மேலும் அவை பொதுவாக வருமானம், நுகர்வு அல்லது நிகரச் செல்வம் ஆகியவற்றின் அடிப்படையில் செலுத்தும் வரி செலுத்துபவரின் திறனை அடிப்படையாகக் கொண்டவை. மறைமுக வரிகள் என்பவை பொருட்கள் மற்றும் சேவைகளின் உற்பத்தி அல்லது நுகர்வு அல்லது இறக்குமதி மற்றும் ஏற்றுமதி உள்ளிட்ட பரிவர்த்தனைகள் மீது விதிக்கப்படும் வரிகளாகும்.

எடுத்துக்காட்டுகளில் பொதுவான மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட விற்பனை வரிகள், பெறுமதி சேர் வரிகள் (VAT), உற்பத்தி அல்லது உற்பத்தியின் எந்தவோர் அம்சத்தின் மீதான வரிகள், சட்டப் பரிவர்த்தனைகள் மீதான வரிகள் மற்றும் சுங்கம் அல்லது இறக்குமதி வரிகள் ஆகியவை அடங்கும்.

இலங்கையின் இன்றைய பொருளாதார வீழ்ச்சி, மற்றும் வங்குரோத்து நிலைக்கு பிரதான காரணமாகச் சுட்டிக்காட்டப்படுவது, கோட்டாபய ராஜபக்‌ஷ ஜனாதிபதியான பின்னர், தனது தேர்தல் வாக்குறுதிகளின்படி வரிகளை மிகப்பெருமளவுக்கு குறைத்தமையாகும். அந்த வரிக்குறைப்பு அரசாங்கத்தின் வருமானத்தை கணிசமாகக் குறைத்தது. அதேவேளை அரசாங்கத்தின் செலவுகள் குறைக்கப்படவில்லை. வருமானத்தை விட செலவு கூடும்போது, அதோடு கடன்சுமையும், அதற்கான வட்டியும் கழுத்தை நெரிக்கும்போது, இலங்கை வங்குரோத்தாவது என்பது தவிர்க்க முடியாத விளைவாகிவிட்டது. மறைமுக வரிகளில், பெறுமதி சேர் வரி 15%-லிருந்து 8% ஆகக் குறைக்கப்பட்தோடு, பெறுமதி சேர் வரிக்கான பதிவுக்கான தேவை எல்லையளவு வருடத்திற்கு 12 மில்லியனிலிருந்து, 300 மில்லியன்களாக அதிகரிக்கப்பட்டது. மேலும், தொடர்மாடிமனைகள் மீதான பெறுமதி சேர் வரி விலக்கப்பட்டது. நேரடி வரிகளைப் பொறுத்தவரையில், மாதமொன்றிற்கு முதல் 250,000 ரூபாய்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டதோடு, அடுத்த 250,000த்திற்கு 6%மும், அடுத்த 250,000-ற்கு 12%-மும், அதற்கு மேற்பட்ட தொகைக்கு 18%-முமே வருமான வரி செலுத்த வேண்டியதாகியது. சில மாதங்கள் முன்பதாக அமைச்சர் அலி சப்ரி குறிப்பிட்டதன்படி, இந்த வரிக்குறைப்பு நடிவடிக்கைகளினால், கடந்த இரண்டு வருடங்களில் சுமார் 10 இலட்சம் வரி செலுத்துவோரை இலங்கை இழந்துள்ளது.

கோட்டாபயவின் வரிவிலக்கின்படி, இலங்கையின் அதிகபட்ச மொத்த தனிநபர் வருமானவரி, 18%. இந்தியாவில் 42.74%, ஜப்பானில் 55%, நேபாளில் 36%, பங்களாதேஷில் 25%, நெதர்லாந்தில் 49.5%, நியுஸிலாந்தில் 39%, பெல்ஜியத்தில் 79.5%, பூட்டானில் 25%, நோர்வேயில் 46.4%, பாகிஸ்தானில் 35%, பிலிப்பைன்ஸில் 35%, போர்த்துக்கலில் 64%, ஈரானில் 35%, சுவீடனில் 52%, சுவிட்ஸலாந்தில் 59.7%, துருக்கியில் 40%, ஒஸ்திரேலியாவில் 45%, கனடாவில் 54%, ஃபிரான்ஸில் 49%, பிரித்தானியாவில் 63.25%, மற்றும் அமெரிக்காவில் 51.6%. ஆகவே அதிகபட்ச வருமானவரியெ 18% என்பது எவ்வளவு குறைவானது என்பதை நாம் புரிந்துகொள்ளலாம்.

இந்தநிலையில்தான், பொருளாதார மீட்சி ஒன்றை வேண்டி நிற்கும் இலங்கையில், இலங்கையின் இன்றைய ஜனாதிபதியும், நிதியமைச்சருமான ரணில் விக்ரமசிங்ஹ, புதிய அதிகரித்த வரிகளை அறவிடுவதற்கான உள்நாட்டு இறைவரி சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் பிரசுரித்திருக்கிறார். இந்த அதிரடி வரி அதிகரிப்பு நடவடிக்கை கடந்த வாரத்தில் இலங்கையின் வணிக வட்டங்களில் மட்டுமல்லாது, பொதுமக்களிடையேயும் பேசுபொருளாக மாறியிருக்கிறது.

கோட்டாவின் வரிகளின் கீழ், வருடத்திற்கு முப்பது இலட்சம் ரூபாயாக இருந்த வருமானவரி விலக்கு எல்லையளவு, வருடத்திற்கு பன்னிரண்டு இலட்சம் ரூபாயாக குறைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே வருடத்திற்கு 12 இலட்சம் ரூபாய்க்கு அதிகமாக வருமானம் பெறும் அனைவரும் வருமான வரி செலுத்த வேண்டியவர்களாகிறார்கள். அதுபோல, வருமான வரியளவும் கணிசமாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது என்பதோடு, 18% ஆக இருந்த அதிகபட்ச வருமானவரியளவு இரு மடங்காக 36% அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இதன் யதார்த்த விளைவைச் சொல்வதானால், இதுவரை 2 இலட்ச ரூபாய் மாதச்சம்பளம் பெற்றவருக்கு, வருமான வரி கிடையாது, ஆனால் இந்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேறினால், மாதம் 10,500 ரூபாய் வரியாகச் செலுத்த வேண்டியிருக்கும். அதுபோல, இதுவரை 4 இலட்ச ரூபாய்மாதச்சம்பளம் பெற்றவர் மாதத்திற்கு 9000 ரூபாய் வரிசெலுத்தவேண்டியதாக இருந்தது, புதிய சட்டமூலத்தின் படி 70,500 ரூபாவாக அதிகரித்துள்ளது! இந்த திடீர் வரி அதிகரிப்பு உயர்-மத்தியதர வருமான மற்றம் உயர் வருமான தரப்பினரைக் கடுமையாகப் பாதிக்கும். வரியின் அளவின் நியாயதர்மம் என்பதைவிட, திடீர் அதிகரிப்பு என்பதுதான் இங்கு பிரச்சினையை வீரியப்படுத்துவதாக இருக்கிறது. இதுவரை 4 இலட்சம் சம்பளம் பெற்றுவந்தவர், தன்னுடைய செலவினங்களை அதற்கேற்றாற்போல கட்டமைத்திருப்பார். வீட்டுக்கடன், வாகனக்கடன், பிள்ளைகளின் கல்விக்கடன் என அனைத்தும் அந்த வருமானத்திற்கு தக்கபடி கட்டமைக்கப்பட்டிருக்கும். திடீரென அந்த 4 இலட்ச ரூபாய் சம்பளத்தில் 70,500 ரூபாய் குறைவதானது, அவர்களைக் கடுமையாகப் பாதிப்பதாகவே அமையும்.

மறுபுறத்தில் புதிய திட்டத்தின் கீழ் நிறுவனங்களுக்கான வருமான வரி 24%-லிருந்து 30%-ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும் இதுவரைகாலம் வழங்கப்பட்ட பல வரிச்சலுகைகளும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வந்த வரிச்சலுகைகளும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. இதைவிட, 100,000 ரூபாய்க்கு மேல் வாடகை வருமானம் மீது 10 சதவீதம் முற்கூட்டிய வருமான வரி, வட்டி வருமானம் அல்லது தள்ளுபடியில் 5 சதவீதம், ஈவுத்தொகை கொடுப்பனவுகளில் 15 சதவீதம், மற்றும் பிற கொடுப்பனவுகளுக்கு 14 சதவீதம் என்பனவையும் தனிநபர்களையும், நிறுவனங்களையும், குறிப்பான சிறு நிறுவனங்களையும் பெருமளவு பாதிப்பதாக அமைகிறது.

இரண்டு விஷயங்களை நாம் இங்கு கருத்திற்கொள்ளுதல் அவசியமாகிறது. முதலாவது, பொருளாதார மீட்சிப் பயணத்திற்கு, இந்த வரிவிதிப்புக்கள் அவசியமானவை. விரும்பியோ, விரும்பாமலோ, இலங்கையின் அரச செலவினங்கள் மிக அதிகம். அதற்குள் இலவசக் கல்வி, இலவச மருத்துவம், சமுர்த்தி, வீடமைப்பு உள்ளிட்ட சமூகப் பாதுகாப்பு ஆகியவற்றிற்கான செலவுகளும் அடக்கம். பணத்தை அச்சிட்டு இவற்றிற்கான செலவுகளைச் செய்தால், பணவீக்கம் என்பது கூடி, ஸிம்பாம்வேயைப் போலவேதான் நாம் மாறவேண்டியிருக்கும். ஆகவே பணத்தை அச்சிடுவது தீர்வல்ல. அரச வருமானம் அதிகரிக்க, வரிகள் தேவை. இரண்டாவது, இந்த வரி அளவுகள், ஏனைய நாடுகளோடு ஒப்பிடுகையில் சாதாரணமற்ற வரி அளவு அல்ல. ஆனால் தீடீரென்ற 18% லிருந்து 36% என்ற இரட்டிப்பான அதிகரிப்பானது, சிலருக்கு ஆரம்பத்தில் பெரும் சவால்களை ஏற்படுத்தப்போகிறது என்பது மறுக்க முடியாதது.

மறுபுறத்தில், மக்கள் இத்தனை கஷ்டத்தில் கட்டும் வரிகள் முறையாக, தேவையானவற்றிற்குத்தான் செலவளிக்கப்படுகின்றனவா என்பது இங்கு முக்கியமானது. மக்களுடைய இரத்தமும், வியர்வையும் இலவசக் கல்விக்கும், இலவச மருத்துவத்திற்கும், உணவுப்பாதுகாப்பு உள்ளிட்ட சமூகப் பாதுகாப்பு நடவடிக்ககைளுக்கு செலவளித்தால் அதில் நியாயமுண்டு. அதைவிடுத்து இராணுவத்திற்கும், அரசியல்வாதிகளில் படோடாபங்களுக்கும், பயனற்ற கட்டுமானங்களுக்கும், நட்டத்திலியங்கும் “வெள்ளை யானைகளான” அரசுடைமையான நிறுவனங்களுக்கும், ஊழலுக்கும் மக்களின் இரத்தத்திலும், வியர்வையிலும் கிடைத்த வரிப்பணம் வீணாக்கப்படுவதானது மிகப்பெரும் அநீதியும், பாவமுமாகும். ஆகவே தமது வரிப்பணம் முறையாக, மக்களுடைய நன்மைக்கே செலவிடப்படுகிறது என்ற நம்பிக்கையை அரசு மக்களிடம் ஏற்படுத்தினால், வரிகளைப் பற்றிய எதிர்மறை எண்ணம் மக்களிடையே குறையக்கூடும். அது அரசாங்கத்தின் கையில்தான் இருக்கிறது. இல்லையென்றால், அதிகரித்த வரிவிதிக்கும் அரசை மக்கள் வழிப்பறிக்கொள்ளையனாகத்தான் பார்ப்பார்கள்.



## வாழ்வியல் தரிசனம்

மக்களில் பலருக்கு சுதந்திரம் என்பது எது, சுதந்திரம் இன்மை என்பது எது எனத் தெரியாமலேயே வாழ்கின்றார்கள். இருக்க வீடு, கொஞ்சம் பணம், சாப்பிட உணவு எனுமாறு வசதிகள் பெரிதும் இல்லாதவர்கள், எவ்வித சிந்தனையும் இன்றி இருக்கிறார்கள். வசதி படைத்தோர் எதுபற்றியும் கவலைப்படுவதில்லை.

எந்த அரசாங்கம் வந்து போனாலும், அவை என்ன செய்தார்கள் என்பதும் புரிவதில்லை. எல்லா ஆளும் கட்சிகளும் சொன்னவற்றைச் செய்வதில்லை. சுதந்திரம் அனைவருக்குமான பொது உடமை.

இவ்விடயத்தில், பெரும்பான்மை, சிறுபான்மை என்கிற பேதம் கடையாது. முன்னேறியுள்ள நாடுகள் போல, ஏன் எங்களால் மாறமுடியவில்லை எனக் கேள்வி கேட்பதுமில்லை.

எமது நாடு சகல வளங்களும் கொட்டது. ஆனால், ஏன் பொருளாதார சுபீட்சம் காண முடியாமல் இருக்கின்றது? மேலை நாடுகள், அபிவிருத்தியடைந்த நாடுகளில், பெரும்பான்மை சிறுபான்மை என எல்லோருக்கும் உரிமைகள் ஒன்றுதான்; பேதங்கள் இல்லை. ஆனால் எமது நாட்டில், இனம், மதம், மொழி பேதங்கள் காண்பதால் முன்னேற முடியாமல் தவிக்கின்றது. பொருளாதாரம் மேம்படல் வேண்டும். யுத்தம், போராட்டம், வேலைநிறுத்தம், கடன்பெறுதல் இருந்தால் எப்படி நாடு செழிக்கும்? சிந்திக்க செயல்பிறக்கும்..

–பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

## கடிதங்கள்

# நீதி கிடைக்க வேண்டும்

கிளிநொச்சி, இலவன்குடா கிராஞ்சி மீனவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் எனவும் அவர்களின் வாழ்வாதார தொழிலை பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலவன் குடா கிராஞ்சி பிரதேசத்தை சேர்ந்த மீனவ சமூகங்கள், அப்பகுதியில் கடந்த பல நாட்களாக சட்ட விரோதமாக அமைக்கப்பட்ட கடலட்டை பண்ணைகளால் சிறு மீன் பிடிக் கரையோர தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கு எதிராக கடந்த பல நாட்களாக தொடர் போராட்டத்திலும் ஈடுபட்டு வருகின்றனர். சட்டவிரோத பண்ணைகளை அகற்றுவதற்கு பொறுப்பு வாய்ந்த அரச அதிகாரிகள், திணைக்களங்கள் எவையும் எந்தவித அக்கறையும் கொள்ளவில்லை என பாதிக்கப்பட்ட மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இலவன் குடா கடற்பரப்பில், 60 வரையான பெண் தலைமைத்துவ அங்கத்தவர் உட்பட 25க்கு மேற்பட்ட கடற்தொழிலாளர் குடும்பங்கள் சிறகு வலை தொழிலின் ஊடாக இறால், நண்டு, மீன்பிடித்தலை தமது அன்றாட வாழ்வாதார தொழிலாக கடந்த 45 வருடங்களுக்கு மேலாக மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் அவர்களின் வாழ்வாதாரத்தை சீர்குலைக்கும் வகையில் தற்போது கடலட்டை பண்ணைகள் அமைக்கும் முயற்சிகள் அங்கு இடம்பெறுவதாக பாதிக்கப்பட்டவர்கள் குற்றம்சாட்டுகின்றனர்

SLT-MOBITEL IDD உடன்

# தடங்கலில்லாத உயர்தர சர்வதேச அழைப்பு சேவை




SLT Home வாடிக்கையாளர்களுக்கு உயர் தரம் வாய்ந்த தடங்கலில்லாத சர்வதேச நேரடி அழைப்பு சேவையை தெளிவான குரல் வசதியுடன் வழங்குவதாக SLT-MOBITEL அறிவித்துள்ளது. இதன் மூலமாக, வெளிநாட்டிலுள்ள தமது குடும்பத்தார் மற்றும் நண்பர்களுடன் தேவையான போது உரையாடுவதற்கான வசதியை உறுதி செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

சகல SLT Home வாடிக்கையாளர்களின் தொலைபேசிகளிலும் IDD (International Direct Dialling) வசதி செயற்படுத்த ப்பட்டுள்ளதுடன், தெளிவான குரல் தரம் மற்றும் தடங்கலில்லாத சேவையை வழங்கப்படுவதாக SLT-MOBITEL வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

SLT-MOBITEL இனால் போட்டிகரமான விலையில் IDD கட்டணங்கள் சகல நாடுகளுக்கும் வழங்கப்படுவதுடன், வாடிக்கையாளர்களுக்கு தமது தேவைக்கமைய, 'Per Second' அல்லது 'Per minute" எனும் அடிப்படையிலான கட்டண முறையை தெரிவு செய்யும் வசதி வழங்கப்படுகின்றது. மேலும், பெறுமதி வாய்ந்த வியாபார அழைப்புகளை முன்னெடுப்பது முதல், குடும்பத்தார் மற்றும் நண்பர்களுக்கு விசேட நிகழ்வுகளின் போது தொடர்பு கொள்வது வரையில், SLT- MOBITEL வாடிக்கையாளர்களுக்கு தற்போது உயர் தரம் வாய்ந்த தெளிவான அழைப்புகளை தமது சர்வதேச அழைப்புகளை மேற்கொள்ளும் தேவைக்காக மேற்கொள்ள முடியும் எனவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாடிக்கையாளர்களின் தரம் மற்றும் எளிமையான தேவைகளை நிவர்த்தி செய்யும் சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு SLT-MOBITEL தன்னை அர்ப்பணித்துள்ளதுடன், சர்வதேச அழைப்புகளை மேற்கொள்வதற்கு சிறந்த தொடர்பாடல் முறையாக SLT IDD அமைந்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

## ரிட்ஸ்பரி சுப்பர் 16 ஜூனியர் ரக்பி கானிவல்

# 2022 க்கு அனுசரணை




ரிட்ஸ்பரி, தொடர்ச்சியாக இரண்டாவது வருடமாகவும் பெருமளவு எதிர்பார்ப்புகளுடன் இடம்பெறும் "ரிட்ஸ்பரி சுப்பர் 16 ஜூனியர் ரக்பி கானிவல் 2022" போட்டிகளுக்கு அனுசரணை வழங்க முன்வந்திருந்தது. தேசத்தின் விளையாட்டுத் துறையை கட்டியெழுப்புவதில் வர்த்தக நாமம் கொண்டுள்ள அர்ப்பணிப்பின் நீடிப்பாக இந்தத் திட்டம் அமைந்துள்ளது.

12ஆவது வருடமாகவும் இடம்பெற்ற இந்த ஆண்டின் சுப்பர் 16 ஜூனியர் ரக்பி கானிவல் போட்டிகளில் 23 பாடசாலைகளின் 10 வயதுக்குட்பட்ட மற்றும் 12 வயதுக்குட்பட்ட 112 அணிகள் பங்கேற்றன. கானிவலில் முதல் மூன்று சுற்றுப் போட்டிகளும் றோயல் கல்லூரி விளையாட்டுத் தொகுதியில் இடம்பெற்றதுடன், ஏனைய போட்டிகள் ஒக்டோபர் 2ஆம் திகதி இடம்பெற்றன.

இந்தக் களியாட்ட நிகழ்வினூடாக வளர்ந்து வரும் ரகர் விளையாட்டு வீரர்களுக்கு தமது திறமைகளை களிப்பான முறையில் போட்டிகரமான சூழலில் வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது. விளையாட்டில் பங்கேற்கும் சகல விளையாட்டு வீரர்களின் கடின உழைப்பு, அர்ப்பணிப்பு மற்றும் உண்மையான விளையாட்டுத் திறன் ஆகியவற்றை ஊக்குவிப்பதாக அமைந்திருக்கும் என்பதுடன், சம்பியன் ஒருவரை தெரிவு செய்யாது.

ரக்பி கானிவல் தொடர்பில் சிபிஎல் ஃபுட்ஸ் இன்டர்நஷனல் சந்தைப்படுத்தல் பொது முகாமையாளர் நிலுபுல் டி சில்வா கருத்துத் தெரிவிக்கையில், "இலங்கையில் அடுத்த தலைமுறை விளையாட்டு வீரர்களை தயார்ப்படுத்தும் பயணத்தில் மற்றுமொரு படியாக இந்த நிகழ்வு அமைந்திருந்தது. இளம் ஆற்றல் படைத்த விளையாட்டு வீரர்கள் மத்தியில் அவர்களின் திறமைகளை ஊக்குவித்து மேம்படுத்துவதில் ரிட்ஸ்பரி எப்போதும் தம்மை அர்ப்பணித்துள்ளது. ரிட்ஸ்பரி சுப்பர் 16 ஜூனியர் ரக்பி கானிவல் 2022 நிகழ்வை முன்னெடுக்கப்பட்டது எமக்கு மிகவும் பெருமையாக அமைந்துள்ளதுடன், அனைத்து அணியினரும் சிறப்பாக தமது திறமைகளை வெளிப்படுத்திருந்தனர் என நாம் எதிர்பார்க்கின்றோம்." என்றார்.

ஏற்பாட்டுக் குழுவின் செயலாளர் ஷாஹிட் சங்கானி இந்த நிகழ்வு தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், "ரிட்ஸ்பரி சுப்பர் 16 ஜூனியர் ரக்பி கானிவல் 2022, ரிட்ஸ்பரி உடன் தொடர்ந்தும் 2 ஆவது வருடமாக கைகோர்த்திருந்ததையிட்டு பெருமை கொள்கின்றது. இந்தப் பங்காண்மையினூடாக இலங்கையில் ஜூனியர் ரக்பி திறமையை மேம்படுத்தக்கூடியதாக இருக்கும் என நாம் நம்புகின்றோம். இந்தப் போட்டிகளில் இவ்வாண்டில் மொத்தமாக 23 பாடசாலைகளின் 112 அணிகள் பங்கேற்றன. இந்நிகழ்வின் வெற்றிக்கு இது சிறந்த ஆதாரமாக அமைந்திருந்தது." என்றார்.

இலங்கையில் ரக்பி விளையாட்டு புகழ்பெற்றுள்ள நிலையில், அதிகளவு ரசிகர்களையும் கொண்டுள்ளது. இலங்கையின் சொக்லட் துறையில் சந்தை முன்னோடி எனும் நிலையைக் கொண்டுள்ள ரிட்ஸ்பரி, இந்த ஆண்டும் இந்நிகழ்வு வெற்றிகரமாக இடம்பெறுவதை உறுதி செய்தது.

ரக்பி விளையாட்டுக்கு மேலதிகமாக, இலங்கையில் பல்வேறு விளையாட்டு நிகழ்வுகளின் ஆதரவாளராக ரிட்ஸ்பரி திகழ்கின்றது. குறிப்பாக, சேர் ஜோன் டார்பட் மெய்வல்லுநர் சம்பியன்ஷிப், விதுதய ரிட்ஸ்பரி நீச்சல் சம்பியன்ஷிப், ரிட்ஸ்பரி ஜூனியர் தேசிய ஸ்கொஷ் சம்பியன்ஷிப் மற்றும் SLTA டெனிஸ் டென்ஸ் அகில இலங்கை பாடசாலை மாணவர் டெனிஸ் விளையாட்டு தினம் போன்றவற்றுக்கு ஆதரவளிக்கின்றது.

பெங்களூர்

# ATM யில் இட்லி

பெங்களூரில் ஹிரேமத் என்பவர், இட்லி தயாரித்து விற்பனை செய்யும் இயந்திரமொன்றை வடிவமைத்துள்ளார்.

. ATM இயந்திரம் போன்று வடிவமைக்கப்பட்டுள்ள குறித்த இயந்திரத்தில், ஒட்டப்பட்டு உள்ள கியூ-ஆர் கோடை ஸ்கேன் செய்து பணம் செலுத்துவதன் மூலம், 55 செக்கன்களில் பொதிசெய்யப்பட்ட நிலையில் இட்லிகளை நுகர்வோர் பெற்றுக் கொள்ள முடியும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இவ் இயந்திரம் 24 மணி நேரமும் செயற்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து ஹிரேமத் கருத்துத் தெரிவிக்கையில் "'எனது மகளுக்கு கடந்த 2016ஆம் ஆண்டு உடல்நலக்குறைவு ஏற்பட்டது. இதன் போது, நள்ளிரவில் இட்லி தேடி அலைந்த போது எங்கும் கிடைக்கவில்லை. இதனையடுத்தே இட்லி தயாரிக்கும் இயந்திரமொன்றை வடிவமைக்கும் முயற்சியில் இறங்கினேன்" என்றார்.

தற்போது குறித்த இயந்திரத்திற்கு மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்புக் கிடைத்துள்ளதால், விரைவில் பெங்களூர் விமான நிலையத்திலும் இதனை அறிமுகப்படுத்த முடிவு செய்துள்ளேன்' என்றார்.






ஒடிசா

# மோக வலையில் சிக்கிய 25 அரசியல் பிரமுகர்கள்

## அந்தரங்க வீடியோக்களும் சிக்கின



ஒடிசாவின், கலஹண்டி மாவட்டத்தைச் சேர்ந்தவர் 'அர்ச்சனா நாக்'.

26 வயதான இவர், தனது கணவரின் உதவியுடன் அம் மாநிலத்தைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள், தொழிலதிபர்கள், சினிமா தயாரிப்பாளர்கள் எனப் பிரபலமானவர்களைக் குறிவைத்து, அவர்களுடன் நெருங்கிப் பழகி, அவர்களுடன் தனிமையில் இருக்கும்போது அதனை ரகசியமாக வீடியோ மற்றும் புகைப்படமெடுத்து, எடுத்து அதனை இணையத்தில் வெளியிட்டு விடுவதாகக் கூறி பணம் பறித்து வந்துள்ளார்.

இந்நிலையில் அர்ச்சனாவால் பாதிக்கப்பட்ட ஒருவர் இது குறித்து பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியதையடுத்து இவ்விடயம் வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

இதனையடுத்து அர்ச்சனாவைக் கைது செய்த பொலிஸார் இது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

அந்தவகையில் விசாரணையில் "அர்ச்சனா கடந்த 4 ஆண்டுகளில் 30 கோடி ரூபாவை குவித்துள்ளார் எனவும், குறிப்பாக சொகுசு கார்கள், நான்கு உயர் இன நாய்கள் மற்றும் ஒரு வெள்ளை குதிரையுடன் ஒரு ஆடம்பரமான வீடொன்றையும் வைத்துள்ளார் எனவும் தெரியவந்துள்ளது.

அத்துடன் இக் குற்றங்கள் அனைத்திற்கும் அவரது கணவர் ஜகபந்து சந்து உடந்தையாக இருந்துள்ளார் எனவும்,அவர்களிடம் பல முக்கிய பிரபலங்களின் அந்தரங்க புகைப்படம் மற்றும் வீடியோக்கள் சிக்கியுள்ளன எனவும் தெரியவந்துள்ளது.

இதில் குறிப்பாக 18 எம்எல்ஏக்கள் மற்றும் அமைச்சர்கள் உட்பட 25 அரசியல் தலைவர்கள் தொடர்பு பட்டுள்ளனர் எனவும் தெரியவந்துள்ளது.

ஜார்கண்ட்

# ஆடையை கழற்றி சோதனை



ஜார்க்கண்ட் மாநிலம், கிழக்கு சிங்பம் மாவட்டத்தில் உள்ள ஒரு பாடசாலையில் 9 ஆம் தரத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு நேற்று முன்தினம் பரீட்சை நடைபெற்றுள்ளது.

இதன்போது பரீட்சை எழுத வந்த மாணவியொருவர் பரீட்சையில் குளறுபடி செய்வதாகக் கருதிய ஆசிரியர் ஒருவர் அம் மாணவியை அறையொன்றுக்குள் அழைத்துச் சென்று ஆடையை கழற்றி சோதனையிட்டுள்ளார்.

இதற்கு மாணவி எதிர்ப்புத் தெரிவித்த போதும் ஆடையை கழற்றிச் சோதனை செய்துள்ளார்.

இதனால் கடுமையான மன உளைச்சலுக்குள்ளான குறித்த மாணவி

வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் உடலில் மண்ணெண்ணையை ஊற்றி தீக்குளித்துள்ளார்.

இதில், தீக்குளித்ததில் வலியால் மாணவி கதறி துடித்துள்ளார். மாணவியின் அலறல் சத்தம் கேட்ட அக்கம்பக்கத்தினர் அவரை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர்.

கடுமையான தீக்காயங்களுடன் அனுமதிக்கப்பட்டுள்ள மாணவிக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இச் சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்தபொலிஸார், குறித்த ஆசிரியை கைது செய்து விசாரணை நடத்தி வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

சென்னை

# மிளகாய்த்தூள் அபிஷேகம்

தமிழகம் முழுவதும் உள்ள நீர்நிலைகளில் காணப்படும் ஆக்கிரமிப்புகளை அகற்றும் நடவடிக்கையில் அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

அரசின் இந்நடவடிக்கைக்கு ஒரு புறம் ஆதரவும், மற்றொரு புறம் எதிர்ப்பும் இருந்து வருகின்றது.

அந்த வகையில், சென்னை தாம்பரம் அருகே நீர்நிலை ஆக்கிரமிப்பில் உள்ள கோவிலை அகற்றுவற்காக அதிகாரிகள் சென்ற போது, அதனை அறிந்த அப்பகுதி மக்கள் அக்கோவிலை அகற்ற எதிர்ப்புத் தெரிவித்தனர்.

அதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து கோவிலை அகற்றும் முயற்சியில் அதிகாரிகள் ஈடுபட்ட நிலையில் ஆத்திரம் அடைந்த பெண் சாமியார்ஒருவர் கோவிலில் உள்ள சாமி சிலைகளுக்கு மிளகாய்த்தூள் அபிஷேகம் செய்து "உன் இடத்தை எவன் அனுபவிக்க நினைக்கிறானோ அவனை சுடுகாட்டுக்கு கொண்டு வரவேண்டும்" என்று கோபத்தோடு சாபம் விட்டார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த அதிகாரிகள் அவ்விடத்தை விட்டுச் சென்றுள்ளதுடன், கோவில் நிர்வாகிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தி அக் கோவிலை அகற்ற கால அவகாசம் வழங்கியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



கர்நாடகா

# பஸ்-லொறி-வேன் விபத்தில் 9 பேர் உயிரிழப்பு

கர்நாடக மாநிலம், ஹசன் மாவட்டத்தின் பனவாரா அருகே, நேற்று முன்தினம்(15) இரவு 20-க்கும் மேற்பட்டவர்களை ஏற்றிக் கொண்டு பயணித்த வேன் ஒன்று, அவ்வீதியில் பயணித்த பஸ் மற்றும் லொறியொன்றுக்கு இடையில் சிக்கி விபத்துக்குள்ளானது.



இவ் விபத்தில் வேனில் பயணித்த 6 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் பொதுமக்களின் உதவியுடன் படுகாயம் அடைந்தவர்களை மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்க ப்பட்டவர்களில் 3 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய பிரதேசம்

# ஹிந்தியில் மருத்துவக் கல்வி

இந்தியாவில் முதல் முறையாக, மத்தியபிரதேசத்தில், ஹிந்தியில் எம்.பி.பி.எஸ். மருத்துவக் கல்வியை உள்துறை அமைச்சர் அமித் ஷா நேற்றைய தினம் (16) தொடங்கி வைத்தார்.

அந்தவகையில் 13 அரச மருதுவக்கல்லூரிகளில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு உடற்கூறியல் ,உடலியல் , உயிர் வேதியியல் ஆகிய 3 பாடங்கள் ஹிந்தியில் கற்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அமைச்சர் அமித்ஷா இது குறித்து வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில் " மத்தியப் பிரதேச மாநிலம் போபாலில் ஹிந்தியில் மருத்துவக் கல்வி தொடங்கும் இன்றைய நாள் இந்தியக் கல்வித் துறைக்கு வரலாற்றுச் சிறப்புமிக்க நாள்.

மாணவர்கள் தங்கள் சொந்த மொழியில் படிக்கும் வகையில், இந்திய மொழிகளுக்கு அதிகாரம் அளிக்க வேண்டும் என்ற பிரதமர் மோடியின் தீர்மானத்தில் இது ஒரு முக்கியமான படியாகும்"எனத் தெரிவித்துள்ளார்.



பாகிஸ்தான்

# அழுகிய 200 உடல்கள் மீட்பு

பாகிஸ்தானின் முல்தான் நகரில் உள்ள மருத்துவமனையொன்றின் பிணவறைக் கூரையின் மீது அழுகிய நிலையில் 200 உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் பஞ்சாப் மாகாண முதலமைச்சரின் ஆலோசகர் மற்றும் அதிகாரிகள் அனைவரும் குறித்த மருத்துவமனைக்குச் சென்று ஆய்வு நடத்தியதோடு, அவ்உடல்களை முறைப்படி அகற்றும் படியும் உத்தரவிட்டனர்.

அத்துடன் உயிரிழந்தவர்களின் உடல்களை கூரையின் மேல் வீசிய மனிதாபிமானமற்ற செயலை செய்த ஊழியர்கள் மீது கடுமையான நடவடிக்கை



எடுக்க வேண்டும் எனவும் மாநில அரசுத் தரப்பில் உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் இச்சம்பவமானது உலகளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தான்



## பாகிஸ்தானைச் சீண்டும் பைடன்

"உலகின் அபாயகரமான நாடுகளில் பாகிஸ்தானும் ஒன்று " என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் லோஸ் ஏஞ்செல்ஸ் நகரில் நடைபெற்ற அரசியல் நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "பாகிஸ்தானில் அணு ஆயுதங்கள் போதிய ஒருங்கிணைப்பு இன்றி உள்ளது" எனவும் விமர்சித்துள்ளார்.

இந்நிலையில் பாகிஸ்தான் குறித்து பைடன் தெரிவித்த கருத்துக்கு பதிலளிக்கும் வகையில் "அமெரிக்காவைப் போல நாங்கள் போரில் ஈடுபடவில்லை எனவும், அமெரிக்காவைப் போலல்லாமல், பாகிஸ்தானிடம் மிகவும் பாதுகாப்பான அணுசக்தி கட்டுப்பாட்டு அமைப்பு உள்ளது எனவும்அந்நாட்டின் முன்னாள் பிரதமர் இம்ரான்கான் தெரிவித்துள்ளார்.

டுபாய்

## வழிகாட்டும் ரோபோ

டுபாயில் உள்ள புயூட்சர் அருங்காட்சியகத்தில், மிகவும் மேம்படுத்தப்பட்ட மனித உருவ ரோபோவொன்று ஊழியராகப் பணியமர்த்தப்பட்டுள்ளது.


அமேகா (Ameca) எனப் பெயரிடப்பட்டுள்ள குறித்த ரோபோவானது, பல மொழிகளில் பேசும் திறனுடையது எனவும், இது பார்வையாளர்களுக்கு வழிகாட்ட வடிவமைக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இவ்ரோபோவின் வீடியோவானது இணையத்தில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



பிரேசில்

## அப்பிள் நிறுவனத்துக்கு 731 கோடி ரூபாய் அபராதம்



பிரேசிலில் சார்ஜர் இல்லாத ஐபோன்களுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஐபோன் 13 ரக போன்களை சார்ஜரின்றி அப்பிள் நிறுவனம் விற்பனை செய்த காரணத்திற்காக, அந்நிறுவனத்திற்கு இலங்கை மதிப்பில் 731 கோடி ரூபாய் அபராதம் விதித்து பிரேசில் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மேலும், இது வாடிக்கையாளர்களைக் கூடுதல் தயாரிப்புகளை வாங்க கட்டாயப்படுத்தும் தவறான நடைமுறை எனத் தெரிவித்த நீதிமன்றம், பிரேசிலில் கடந்த 2 ஆண்டுகளில் ஐபோன் 12 அல்லது 13 ரக போன்களை வாங்கியவர்களுக்கு சார்ஜர் வழங்கவும் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

துருக்கி

## நிலக்கரி சுரங்கத்தில் வெடி விபத்து – 25 பேர் உயிரிழப்பு

துருக்கியின் பார்டின் மாகாணத்தில் உள்ள நிலக்கரிச் சுரங்கமொன்றில் கடந்த 14 ஆம் திகதி ஏற்பட்ட வெடி விபத்தில் சிக்கி 25 பேர் உயிரிழந்தனர்.

இவ்விபத்தின் போது குறித்த சுரங்கத்தில் நூற்றுக்கும் மேற்பட்டோர் பணிபுரிந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சுரங்கத்தினுள் சிக்கிக் கொண்ட 11 பேர் வெளியேறிய நிலையில், சிலரை மீட்புக் குழுவினர் மீட்டனர்.

சுமார் 300 முதல்



350 மீற்றர் ஆழத்தில் சிக்கிக் கொண்டிருக்கும் 50 தொழிலாளர்களை மீட்கும் பணி தொடர்ந்து நடைபெற்றுவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுரங்கத்தில் மீத்தேன் வாயு வெடித்தமையே இவ் விபத்துக்கான காரணம் என முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

அமெரிக்கா

## கண்களில் இருந்து '23 கண்டக்ட் லென்ஸ்கள்' அகற்றம்

பெண்ணொருவரின் கண்களில் இருந்து '23 கண்டக்ட் லென்ஸ்களை' (Contact lenses) மருத்துவர்கள் அகற்றும் அதிர்ச்சி வீடியோவொன்று இணையத்தில் வைரலாகி வருகிறது.

அமெரிக்காவைச் சேர்ந்த குறித்த பெண் கடந்த 23 நாட்களாக தினமும் இரவில் கண்களில் இருந்து லென்ஸை அகற்ற மறந்து, பின்னர் மீண்டும் காலையில் புதிய கண்டக்ட் லென்ஸை வைத்து வந்துள்ளார்.

இந்நிலையில் நீண்ட காலமாக கண் வலியால் அவதிப்பட்ட அவர் மருத்துவரை நாடிய போது அவரைப் பரிசோதித்த மருத்துவர் அப்பெண்ணின் இமைக்கு அடியில் ஆபத்தான அளவு கண்டக்ட் லென்ஸ்கள்



இருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளார்.

இதன்போதே அந்த பெண் தொடர்ந்து 23 நாட்கள் இரவில் உறங்கச் செல்வதற்கு முன்பாக லென்ஸை அகற்ற மறந்துள்ளமை தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் குறித்த பெண்ணின் கண்களில் இருந்து வெற்றிகரமாக 23 லென்ஸ்களையும் மருத்துவர்கள் அகற்றியுள்ளனர்.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த மருத்துவர் "கண்ணில் லென்ஸை வைத்துக் கொண்டு இரவில் தூங்கவேண்டாம்" என எச்சரித்துள்ளார்.

மெக்சிகோ

### மதுபான விடுதியில் துப்பாக்கிச் சூடு

## 12 பேர் உயிரிழப்பு

மெக்சிகோவில் மதுபான விடுதியொன்றில் நேற்று முன்தினம் (15) மர்ம நபர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 12 பேர் உயிரிழந்துள்ளனர்.

மெக்சிகோவின் ஈராபுவாட்டோ நகரில் உள்ள மதுபான விடுதியொன்றுக்குள் நுழைந்த மர்ம நபர்கள் சிலர், அங்கிருந்தவர்கள் மீது கண்மூடித்தனமாகத் துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத் தாக்குதலில் 12 பேர் உயிரிழந்துள்ள நிலையில், பலர் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்து பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



### இருபதுக்கு – 20 உலகக் கிண்ணம்:

# நமீபியாவிடம் இலங்கை அதிர்ச்சித் தோல்வி

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு – 20 உலகக் கிண்ணத் தொடரானது நேற்று ஆரம்பித்த நிலையில், முதல் நாளிலேயே அதிர்ச்சியாக, ஜீலொங்கில் நடைபெற்ற இலங்கையுடனான போட்டியில் நமீபியா வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கையணியின் தலைவர் தசுன் ஷானக, தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய நமீபியா, ஆரம்பத்திலிருந்தே குறிப்பிட்ட இடைவெளிகளில் துஷ்மந்த சமீர, பிரமோத் மதுஷன் (2), சாமிக கருணாரத்தன, வனிடு ஹஸரங்க, மகேஷ் தீக்ஷனவிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்போதும், ஜான் பிரைலிங்க்கின் 44 (28), ஜே.ஜே. ஸ்மட்ஸின் ஆட்டமிழக்காத 31 (16) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 163 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 164 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை



ஆரம்பத்திலிருந்தே வரிசையாக விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 19 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்து 108 ஓட்டங்களையே பெற்று 55 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக ஜான் பிரைலிங்க் தெரிவானார்.

# பாலர் பாடசாலை மாதிரி இல்ல விளையாட்டுப் போட்டி

எம்.யூ.எம்.சனூன்

புத்தளம் நகர சபையினால், பாலர் பாடசாலை இல்ல மாதிரி விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள் புத்தளம் மர்ஹூம் எம். எச்.எம். அஷ்ரப் ஞாபகார்த்த சிறுவர் பூங்கா வளாகத்தில் அண்மையில் நடைபெற்றன.

ஆசிரியைகளான பாத்திமா சபானா மற்றும் பாத்திமா நிஸாயா ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், புத்தளம் நகரபிதா எம்.எஸ்.எம்.ரபீக் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதிகளாக நகரசபை உறுப்பினர்கள் ரனீஸ் பதூர்தீன், பர்வின் ராஜா, புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலை அதிபர் ஐ.ஏ.நஜீம் ஆகியோருடன் ஏனைய அதிதிகளும் கலந்துகொண்டனர்.

ரொக் ஸ்டார் மற்றும் சன்ப்ளவர் ஆகிய இரு இல்லங்களின் சிறார்கள் போட்டிகளில் கலந்துகொண்டனர். 1975 ஆம் ஆண்டில் புத்தளம் நகர சபையினால் ஆரம்பிக்கப்பட்ட இரு முன்பள்ளி பாடசாலைகளுள் இப்பாடசாலையும் ஒன்றாகும்.

நிகழ்வில் உரையாற்றிய நகரபிதா, மறைந்த தலைவர் கே.ஏ.பாயிஸ் முன்பள்ளி ஆசிரியைகளை நிரந்தரமாக்கும் திட்டத்துக்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்துவந்தார். அவரின் மறைவையடுத்து தானும் அதற்கான முயற்சிகளைத் தொடர்ந்து முன்கொண்டு சென்றதாகவும், நாட்டின் நெருக்கடி நிலைமையினால் அது தற்காலிகமாகத் தடைப்பட்டிருக்கிறது என்றார்.

எனினும் நாட்டு நிலைமைகள் சீராகுமிடத்து தான் அதற்கான முயற்சிகளை மீண்டும் முன்னெடுப்பேன் என்றார்.

இந்நிலையில், போட்டிகளில் கலந்துகொண்ட, வெற்றிபெற்ற அனைத்து சிறார்களுக்கும் அதிதிகளினால் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டதோடு பதக்கங்களும் அணிவிக்கப்பட்டன.

















### ஆசிய கோப்பை கிரிக்கெட்

# இந்திய மகளிர் அணி 7ஆவது முறையாக சாம்பியன்

ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்திய மகளிர் அணி 7 ஆவது முறையாக சாம்பியன் பட்டம் வென்றுள்ளது.

20 வது ஓவர்களைக் கொண்ட 8ஆவது பெண்கள் ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டி வங்கதேசத்தில் உள்ள சில்ஹெட் நகரில் கடந்த 1-ஆம் திகதி ஆரம்பமானது.

7 அணிகள் பங்கேற்றிருந்த இந்தப் போட்டியில் நடப்பு சாம்பியன் வங்கதேசம், ஐக்கிய அரபு அமீரகம், மலேசியா ஆகிய அணிகள் லீக் சுற்றுடன் வெளியேறின. பாகிஸ்தான், தாய்லாந்து அணிகள் அரையிறுதியில் தோற்றன.

இந்த நிலையில் சனிக்கிழிமை (15) நடைபெற்ற இறுதிப் போட்டியில் 6 முறை சாம்பியனான இந்திய அணி, இலங்கையை எதிர்கொண்டது. இதில், நாணய சுழற்சியில் வென்ற இலங்கை அணி துடுப்பெடுத்தாட முடிவு செய்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. இந்திய அணியின் பந்துவீச்சை எதிர்கொள்ள முடியாமல் திணறிய இலங்கை 4 ஆவது ஓவரிலேயே 3 விக்கெட்டுகளை இழந்து வெறும் 9 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்தது.

இந்தியா பந்துவீச்சில் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தியதன் காரணமாக நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர் முடிவில் இலங்கை அணி 9 விக்கெட் இழப்பிற்கு 65 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது.

இந்திய வீராங்கனை ரேனுகா சிங் 3 ஓவர் வீசி 5 ஓட்டங்களை விட்டு கொடுத்து 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார். 66 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்திய அணியில் செஃபாலி வெர்மா 5 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

அவரை தொடர்ந்து களமிறங்கிய ஸ்மிருதி மந்தானா அதிரடியாக ஆடி, 25 பந்துகளில் 51 ஓட்டங்களை விளாசினார். இறுதியில் 8.3 ஓவரிலேயே இலக்கை எட்டிய இந்திய அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதன் மூலம் இந்திய அணி 7 ஆவது முறையாக ஆசிய கிண்ண போட்டியில் சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 17 ஒக்டோபர் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.